# ரமணோதயம்

அக்டோபர் 2026
காலாண்டு

அண்ணாமலை தீப இதழ்
விலை ₹ 20





## ரமணோதய அன்பர்களுக்கு ஓர் வேண்டுகோள்

ரமணோதய சந்தா புதுப்பிக்காதவர்கள்
தயவுசெய்து தங்களது சந்தாவைப்
புதுப்பிக்கவோ அல்லது ஆயுள் சந்தாவாகச்
செலுத்தவோ செய்து
உதவுமாறு கேட்டுக் கொள்கிறோம்

உதயம் 26 ஓம் நமோ பகவதே ஶ்ரீ ரமணாய மலர் 1

# ரமணோதயம்

நானுதியாதுள்ள நிலை நாமதுவாய் உள்ள நிலை

அண்ணாமலை தீப இதழ்
அக்டோபர் 2026

ஆசிரியர்: Dr. S. ராம் மோஹன்

- கட்டுரைகள், ஆண்டு சந்தா, விளம்பரங்கள் குறித்த அனைத்து கடிதத் தொடர்புகளுக்கும் ஶ்ரீ ரமண கேந்திர அலுவலக முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.
- கட்டுரைகளுக்கு சன்மானம் எதுவும் கொடுக்கப்பட மாட்டாது. பிரசுரமாகாத கட்டுரைகள் வேண்டுகோளின்பேரில் திருப்பி அனுப்பப்படும்.
- மற்றைய எழுத்தாளர்களின் கட்டுரைகளில் வெளிவரும் கருத்துகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல.

## சந்தா விவரங்கள்

ஆண்டு சந்தா: ₹ 75
ஆயுள் சந்தா: ₹ 1500
தனி பிரதி: ₹ 20

காசோலை/மணியார்டர் 'ரமணோதயம்' என்ற பெயரில் எடுத்து ரமண கேந்திரா டிரஸ்ட், 41/20, அலமேலுமங்காபுரம், மைலாப்பூர், சென்னை 600 004 என்ற முகவரிக்கு அனுப்பவும்

ரமணோதயம் தகவல் மற்றும் தொடர்புக்கு அணுகவும்:
ஆ. குமார் ராஜா: 9444261296
மின்னஞ்சல்: arunamramanam@gmail.com
மேலாளர் கண்ணன்: 9940418375

பதிப்பாளர் & அச்சிடுபவர்:
ஆ. குமார் ராஜா, ரமண கேந்திரா டிரஸ்ட்
41/20, அலமேலுமங்காபுரம், சென்னை 600 004

உரிமை: ரமண கேந்திரா டிரஸ்ட், சென்னை 4
தொலைபேசி: 24611397

# பொருளடக்கம்

அண்ணாமலை தீப இதழ், அக்டோபர் 2026


| வ.எண் | பொருள் | | ப.எண் |
|---|---|---|---|
| 1 | ஆசிரியர் உரை | | 3 |
| 2 | பேரமைதி நிலவிய பெருநாட்கள் | | 19 |
| 3 | நிராலம்பம்: பற்றுக்கோடற்ற பரவெளி | D. தியாகராஜன் | 25 |
| 4 | டி. ஆர். கனகம்மாளின் அருந்தவ வாழ்வு | மா. முருகேசன் | 37 |
| 5 | இனிவரும் திருநாட்கள் | | 45 |
| 6 | தினசரி வாழ்வில் அருள் | வேங்கட் S. ரமணன் | 47 |
| 7 | அகத்தோடுரையாடல் | சத்யநாராயணன் | 55 |
| 8 | வேதம் காட்டும் வாழ்க்கை நெறி | டாக்டர் அபிநவம் ராஜகோபாலன் | 59 |
| 9 | ரமண புராணம் | ஆகுரா | 67 |
| 10 | செய்திகள் | | 77 |

# ஆசிரியர் உரை

## பகவான் மற்றும் வள்ளுவன் நோக்கில் – "ஊழும் உளவியலும்"

"சூழ்கலி நீங்க, தமிழ் மொழி ஓங்க துலங்குக வையகமே!"

என்றான் பாரதி, தமிழ் மொழி ஓங்கினால் வையகம் எப்படித் துலங்கும் என்ற ஐயம் எழலாம் அல்லவா? தமிழ் மொழி ஓங்குதல் என்றால் கருத்துக் களஞ்சியமாம். தமிழ் மொழியில் உள்ள, மக்களை உயர்த்தி மாட்சிமைப்படுத்தும் எண்ணங்கள் ஓங்க வேண்டும் என்பதே பொருள். அக்கருத்துக்கள் ஓங்கினால், அச்சமும் பேடிமையும், அடிமைச் சிறுமதியும் நீங்கி வையகம் துலங்கும் என்பது உண்மையே. இத்தகைய கருத்துக் களஞ்சியங்களில் சிறந்து விளங்கி, உலகப் பொதுமறை என்றும் சிறப்பினைப் பெற்றுத் திகழ்வது திருக்குறள்.

உலகச் சிந்தனையாளர் பல்லோர் நூல்கட்கும், திருக்குறளுக்கும் ஒரு வேறுபாடு உள்ளது. பண்டை அறிஞர் பல்லோருடைய நூல்கள் தமது சமுதாயத்தை முழுதுமாகக் கொண்டு அச்சமூகம் செம்மையான வழியில் வாழ வழி வகுத்தன. இதற்கு மாறாக, குறள் கூறும் ஒழுக்கநெறி சமுதாயத்தில் வாழும் தனிமனிதனின் ஒழுக்கத்தை, வாழ்வை, குறிக்கோளைத் தன் ஆணிவேராகக் கொண்டுள்ளது. தனி மனித வாழ்வு செம்மைப்பட்டால் சமுதாயம் தானே திருந்திவிடும் என்ற உறுதியுடன் குறள் வழி வகுக்கத் தொடங்கியது! 'தனி மனிதனுடைய ஒழுக்க நெறியை அடிப்படையாகக் கொண்டால், ஏறத்தாழ உலக முழுவதற்கும் ஒரு பொதுத்தன்மையை வகுத்துவிடலாம். கால தேசத்திற்கு

ஏற்ப மாறும் அறங்களைவிட்டு, என்றும் எக்காலத்தும் மாறா அறங்களை மனத்துக்கண் மாசிலன் ஆதல், அழுக்காறு இல்லாமை, பயனில் சொல்லாமை போன்றவை வளர்க்க வழிவகுப்பதே வள்ளுவர் கண்ட உயர் நெறி.

ஆதிகால மனிதரிலிருந்து இக்கால மக்கள் வரை மனிதனைச் செயலாற்ற உந்துவது இன்ப நாட்டமே. பல்வேறு வழிகளில் இந்த இன்பம் வரினும்,

“அறத்தான் வருவதே இன்பம்”

என்று தேற்றேகாரத்துடன் கூறும் வள்ளுவம், அறவழியன்றிப் பிறவழிகளில் வரும் இன்பம் இறுதியில் துன்பமே தரும் என்று உலகமுழுவதற்கும் அறிவுறுத்துகிறது. அறத்தை மனதில் கொள்ளவிடாமல் தடுக்கும் நான்கு குற்றங்களான அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச் சொல் ஆகியவற்றை மனத்தினின்றும் நீக்க வேண்டி, விருந்தோம்பல், அன்புடைமை, இன்சொல் கூறல், நடுவு நிலைமை போன்ற தனிமனித ஒழுக்காறுகளை வள்ளுவர் வலியுறுத்துகிறார்.

ஃப்ரெஞ்சு அறிஞர் ஏரியல் கூறியபடி வள்ளுவர் உள்ளத்தின் மிக மென்மையான உணர்வுகளை எத்துணை எளிமையாகவும் நேர்த்தி மிகத் தேர்வாராய்ச்சியுடனும் விளக்கியுள்ளாரோ, அதே அளவு திறமையை முழுமையான சிந்தனையையும், மொழித்திறனையும், கவிதையாற்றலையும், தெய்வீகத்தன்மையின் பெரும்புதிர்களின் இனிமையற்ற நுண்பொருள் சிந்தனைகளை விளக்குவதிலும் வெகு நேர்த்தியும், தெளிவும் காட்டியுள்ளார். மனித சிந்தனையிலும் வாழ்வில் ஒரு முக்கியமான காரணியாக விளங்கும் ஊழ் பற்றிய வள்ளுவரின் கருத்துக்களை இங்கு காண்போம்.

ஊழ் என்பது ஆசிய நாடுகளில் தோன்றிய எல்லாச் சமயங்களாலும் அருளாளர்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்தாகும். பண்டைத் தமிழ் நூல்களிலும் இக்கருத்து விரவிக் கிடக்கிறது. அதே போல் ஊழ்வினை என்ற கருத்தும் விரவியுள்ளது. ஊழ் என்பது பொதுமுறைமை, *Cosmic Order*.

பல்வேறு ஆய்ந்து பார்க்கும் காலையில், ஊழ் என்பது இயற்கையின் சுழற்சி, விளைப் பிறவிகளில் தொடர்ந்து வரும் வினைத்தொகுதிகளின் உள்ளீடுகள் குறுக்கிடுவதால் சாதகமான சூழல் அல்லது பாதகமான சூழல் மாறி மாறி அமைகிறது. செல்வத்தையே குறிக்கோளாக கொண்டு வாழ்வோர், தெள்ளியர் சூழலில் புகவிரும்பார். அவரது மனத்தின் முனைப்பு அதனின்றும் மாறுபட்டு, பொருள் தேடல் குறித்து அமைகிறது. தெள்ளியரோ தம் இயல்பால் அறிவுச் செல்வம் மற்றும் அருட் செல்வம் அன்றி, பொருட் செல்வத்தைப் பொருட்டாய்க் கருதார். இவ்விருநிலைக்கும் உரிய வினை வெவ்வேறாகும் என்கிறார் வள்ளுவர்.

இது குறித்து மேலும் அழுத்தமாக 371ஆம் பாடலில் குறிப்பிடுகிறார் வள்ளுவர்.

“ஆகுஊழால் தோன்றும் அசைவு இன்மை கைப்பொருள்
போகு ஊழால் தோன்றும் மடி.” (குறள் 371)

ஒருவனுக்கு “ஆகு ஊழ்” தோன்றும் சூழலால் மனச்சோர்வின்மை தோன்றும், கையிலுள்ள செல்வம் கைவிட்டுப் போகக்கூடிய “போகூழால்” சோம்பலாகிய மனச்சோர்வு தோன்றும். மன எழுச்சியும் சோர்வும் ஆகூழையும், போகூழையும் முன்கூட்டித் தெரிவிக்கும் அறிகுறிகள் என்று, எப்படி மனிதனின் மாறும் மனப்பாங்கு கூட ஊழ்வினையில் அமைக்கப்படுகிறது என்பதை வள்ளுவர் கூறுகிறார். ஒருவன்

“ஊக்கம் உடையவனாதற்கும், சோம்பல் உடையவன்
ஆதற்கும்..” (371)

*"அறிவுடையன் ஆதற்கும், அறிவிலன் ஆதற்கும்.." (374)*
*"செல்வம் பெறுவதற்கும், வறுமை உறுதற்கும்.." (375)*
*"பெற்ற செல்வம் நிலைத்து நிற்றற்கும் நிலையாமல் அழிதற்கும்.." (376)*

காரணமாக அமைவது ஆகூழ் போகூழ் ஆகிய வினைத் தொகுதிகளே! என்கிறார் வள்ளுவர். இது கிழக்கத்திய சமயங்களான இந்து, பௌத்த, ஜைன, தாவோ சமயங்களில் கர்ம வினைக் கொள்கைகளை ஒத்து இருப்பதையும் காணலாம்.

இதை மேலும் வலியுறுத்தும் முகமாக, ஒருவன் செல்வம் ஈட்டுவதற்கு உதவுவன என்று கருதும் காரணிகள் எல்லாம் தீயனவாய் மாறும், தீயன கருதும் காரணிகள் நல்லவையாய் மாறி, ஆக்கம் தரும். அவரவரது முன்வினைப் பயனுக்குத் தக்கபடி இத்தகு மாற்றங்கள் நிகழ்கின்றன என்கிறார் வள்ளுவர் பெருந்தகை.

*"நல்லன எல்லாம் தீயவாம் தீயவும்*
*நல்லதாம் செல்வம் செயற்கு" (குறள் 375)*

உலக வரலாற்றைக் காணுமிடத்து, வலிமை வாய்ந்த வெற்றி தரும் படைப்பரிவு என்று இந்திய அரசர்கள் கருதிய யானைப்படைகள் சிலபல சமயம் நிலைமாறி அவர்தம் அழிவுக்குக் காரணமாய் அமைந்ததைக் காண்கிறோம். அதே போல், நல்லூழின் காரணமாக, கடுங்குளிர், பனி போன்ற தொல்லைதரும் காரணங்கள் கூட ஒரு நாட்டின் வெற்றிக்குக் காரணமாய் அமைவது உண்டு.

வரதராசனார் வாக்கில் "படைப்பில் ஒரு முறையான ஆட்சி இருந்து வருகிறது. மண்ணிலும் விண்ணிலும் நிகழும் மாறுதல்கள் நெடுங்காலமாகவே ஒருவகை ஒழுங்கிற்கு உட்பட்டு நிகழ்ந்து வருகின்றன. ஞாயிறும், திங்களும், விண்மீன்களும், கோள்களும் ஒழுங்காக இயங்கியும், இயக்கியும் வருகின்றன. இந்த ஒழுங்கான முறைமையை ஆராய்ந்து அறிவது அருமை, ஆனால்

உண்டு என உணர்வது எளிது. இத்தகைய ஆட்சியை ஆன்றோர் 'ஊழ்' என்று குறித்து வைத்துள்ளனர்" என ஊழினை வரையறுக்கிறார்.

திட்டபடி ஊழ் நடந்து வருதலால், மற்றொன்று சூழினும் தான் முந்துறும் வலி படைத்துள்ளதால், அது 'விதி' எனப்படுகிறது. இதன் வலிமை பற்றிக் கூறுங்கால், அழகரடிகள் 'இறை மறைபொருளாய் இருந்து எல்லாவற்றிற்கும் காரணமாக விளங்குவது போல, ஊழும் மறைபொருளாய் இருந்து உலகோர் இயக்கங்கள் எல்லாவற்றிற்கும் காரணமாய் விளங்குகிறது' என்கிறார். இறைவன் முறைமை தவறாதவன்; ஊழும் முறைமை தவறாதது; அறத்திறன் படைத்தது என விளக்குகிறார். ஊழ்வினை என்பது முறையாக வந்த வினை அல்லது முன் செய்த வினை என்றும் பொருள்படும் ஊழ் அதிகாரத்தின் பத்துக் குறட்களிலும் மற்றும் இதனுடன் தொடர்பு கொண்ட பல்வேறு அதிகாரங்களிலும் ஊழ் பற்றிய குறிப்புகள் காணக் கிடக்கின்றன.

வள்ளுவர் பொருளும் இன்பமும் கூறுவதற்கு முன் அவற்றின் முதற்காரணமாக ஊழின் வலி கூறுகின்றார், என்று பரிமேலழகர் ஊழ் பற்றிய அதிகாரத்தின் முன்னுரையில் கூறுகிறார். ஊழைப் பற்றிய வள்ளுவர் கருத்தை முழுவதுமாக அறிய, அவ்வதிகாரத்தின் முன்னுள்ள துறவியல் பகுதியைச் சார்ந்த நிலையாமை, துறவு, மெய்யுணர்தல், அவா அறுத்தல் முதலிய அதிகாரங்களையும் பின்னே வருகின்ற தெரிந்து செயல்வகை, ஊக்கமுடைமை, ஆள்வினையுடைமை, வினைத்தூய்மை, வினைத்திட்டம், வினைசெயல்வகை போன்ற அதிகாரங்களையும் ஒன்றாகப் பயின்றால், வள்ளுவரின் கருத்து புலப்படும். இது குறித்த தனது கருத்துக்களைப் பொருட்பாலில் 17 ஆவது அதிகாரமான அழுக்காறாமை தொடங்கி வள்ளுவர் கூறத் தொடங்குகிறார். 169 ஆவது குறளில், இது சுட்டப்படுகிறது.

*"அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்*
*கேடும் நினைக்கப்படும்" (குறள் 169)*

உலகினில் தீய பண்பு உடையவன் செல்வம் உடையவனாயினும், செவ்விய மனம் உடையவன் கேடு அடைதலும் உண்மை. அதற்குக் காரணம் யாது என்று ஆராய வேண்டும். இப்பிறப்பில் நன்மை, தீமை செய்தவர்கள் அவற்றிற்கு மாறாக விளைவு எய்தினால், இதற்கு வேறு காரணம் யாது? அதனையே வள்ளுவர் அதற்கு காரணம் ஒன்று உள்ளது அது 'ஊழ்' எனச் சுட்டுகிறார். இதனையே பின்னர் தெளிவாக ஊழ் என்னும் 38 ஆவது அதிகாரத்தில்

"இருவேறு உலகத்து இயற்கை திருவேறு
தெள்ளியராதலும் வேறு" (374)

உலகத்தில் ஊழினாலாகிய சூழல் இருவகைப்படும். ஒருவர் செல்வமுடையவர் ஆவதற்கான ஊழ்ச்சூழல் வேறு. தெள்ளிய அறிவுடையார் ஆவதற்கான சூழல் வேறு என்று இங்கே கூறுகிறார்.

எனவே, யாவும் ஊழின் செயல் என அறிந்து, நல்லதையும், தீயதையும் ஒன்றாக எண்ணி ஏற்கும் மனப் பரிணாமம் வேண்டும். ரமண மாமுனிவர் தமது மிக இளவயதில் தம் தாய்க்கு எழுதிய ஓலையில், "அவரவர் பிராரப்தபடி அதற்கானவன் ஆங்காங்கிருந்து ஆட்டுவிப்பன், என்றும் நடவாதது என்பது என் முயற்சிக்கினும் நடவாது, நடப்பது என்பது எத்தடை வரினும் நில்லாது, எனவே சும்மா இருக்கை நன்று" எனக் குறிப்பிடுகிறார்.

வள்ளுவரும்

" நன்று ஆம்கால் நல்லவாக் காண்பவர் அன்று ஆம்கால்
*அல்லல் படுவது எவன்" (குறள் 379)*

"ஊழ் சூழல் நன்றாக இருக்கும் போது அதனால் வரும் இன்பங்களை விலக்காது விரும்பி ஏற்று

அனுபவிப்பவர், தீய ஊழ்ச் சூழல் வரும்போது அனுபவியாது ஏன் அல்லல்படுகிறார்கள்?" என்று விளக்குகிறார் வள்ளுவர். வருவன யாவும் ஊழின் செயல் என ஏற்றுக் கொள்க என்கிறார் வள்ளுவர். இதனையே ஆணித்தரமாய்

*"வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி*
*தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது"*

என்று 377 வது குறளில் கூறுகிறார். இதை விளக்குமுகமாக அழகரடிகள் வகுத்தான் என்பது ஊழை மட்டுமே குறிப்பதன்று, ஊழின் வழியாக இயங்கும் இறைவனையே குறிக்கின்றது. இறைவனையன்றி, ஊழ் செயற்படக் கூடிய அறிவுடைப் பொருள் அன்று" என்று கூறுகிறார்.

இக்கருத்தையே "உபதேச உந்தியார்" என்ற அழகிய தத்துவப் பாடல் கூறுகிறது.

*"கன்மம் பயன்தரல் கர்த்தன் தனதாணையால்*
*கன்மம் கடவுளோ உந்தீ பற!*
*கன்மம் சடமதால் உந்தீ பற!" (உபதேச உந்தியார் 1)*

மற்றும் ஒருவனது உண்மையான அறிவு பல நூல்களைக் கற்பதனால் வருவதில்லை. அது ஊழின் காரணமாக பிறவியிலேயே அமைவதாகும். நுண்ணிய நூல் பலவற்றை அவன் கற்றாலும், அக்கல்வியால் பெறும் அறிவை விட அவனுக்கு உளதாகிப் பிறவியிலேயே அமைந்த ஊழாகிய அறிவே மேம்பட்டுத் தோன்றும்.

*"நுண்ணிய நூல் பல கற்றினும் மற்றும் தன்*
*உண்மை அறிவே மிகும்." (373)*

இவ்வனைத்துக்கும் முத்தாய்ப்பாக வள்ளுவர் கூறுகிறார்.

*"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று*
*சூழினும் தான் முந்துறும்." (380)*

தீய ஊழை நீக்குதற் பொருட்டு, அதற்கு மறுதலையான வழியொன்றைச் சிந்தித்தாலும், அவ்வூழ் அதன் வழியாகவோ, பிறிதொன்றன் வழியாகவோ அதனினும் முற்பட்டு வந்து நிற்கும். இவ்வூழை விட வலிமையுடையது பிறிதில்லை என்பது அவர் துணிவு.

அதே சமயம் ஊழைக்கூறும் வள்ளுவம், இதன் மூலம் முன் விதிக்கொள்கையை (fatalism) வலியுறுத்தி, மனித முயற்சியைச் சிதைக்கும் நூல் அன்று என்பதையும் மனதில் கொள்ளவேண்டும். "ஊழிற் பெருவலி யாவுள" என்று கூறி வள்ளுவர்

"ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழாது உஞற்று பவர்" (620)

என்றும்

"முயற்சி திருவினையாக்கும்" (616)
"முயற்சி தன் மெய்வருத்தக் கூலி தரும்" (619)

என்றும்

"ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்கம் உடையான் உழை" (594)

என்றும்

"மனவலிமை இல்லாதவர்கள், உழைக்காமல் சோம்பலில் மடிந்து விதியைக் குறை கூறுவர்" என்ற எமர்சன் கூறுவதை ஒத்துக் கூறுவதையும் சிந்திக்க வேண்டும்.

ஊழ் என்று ஒன்று இருப்பது உண்மை ஆயினும், அதிலேயே மயங்கி முயற்சியைக் கைவிட்டு விடாதீர். முயற்சியைக் கைவிட்டவனை ஊழ் அழுத்தி விடும் என்பதே திருவள்ளுவர் காட்டும் குறிப்புப் பொருள்.

"பேதைபடுக்கும் இழவூழ் அறிவகற்றும்
ஆகூழால் உற்றக் கடை" (குறள் 372)

என்ற குறளுக்குக் குறிப்புப் பொருளாக "அறிவு முயற்சியின்றி அறியாமையைப் பெருக்கிக் கொள்வதே

*தீய ஊழ், பல்வகை முயற்சியால் அறிவைப் பெருக்கிக் கொள்வதே நல்ல ஊழாகும்" என்று பொருள் கொள்வதற்கும் இடம் உண்டு. இடைவிடாது செய்யும் முயற்சியான ஆள்வினையால், ஊழையும் புறங்காணல் இயலும். ஆள்வினை ஊழைப் புறங்காண்பதற்கு எடுத்துக்காட்டாக மார்க்கண்டேயன் விளங்குவதைத் தமிழ் புலவர் எடுத்துக் காட்டுகிறார். அறிவறிந்து செய்யும் ஆள்வினையால், விடாமுயற்சியால், ஊழின் வேரை அறுத்து, காலனையும் புறங்கண்டவன் மார்க்கண்டேயன்.*

*"உலையா முயற்சி களைகரை ஊழின்*
*வலிசிந்தும் உண்மையும் உண்டே உலகறிய*
*பால்முளையே தின்று மறலி உயிர்குடி*
*கால்முளையே சாலும் கரி!"*

*(பால் முளை – ஊழின் முளை; கரி – சான்று; மறலி – எமன்; கால்முளை சிறுவன் – மார்க்கண்டேயன்)*

*"ஊழ்" என்னும் அதிகாரத்தை ஏன் அறத்துப் பாலின் இறுதியாக வைத்தார் என்பதற்கு மணக்குடவர் விளக்கம் அளிக்கின்றார். "ஊழாவது முன்பு செய்த வினை பின்பு விளையும். முறை மேற்கூறிய அறப்பகுதியும் இனிக்கூறுகின்ற பொருட்பகுதியும் இன்பப் பகுதியும் முன் செய்த நல்வினையால் வருதலையும், இவற்றிற்கு மாறாக பாவமும், வறுமையும், துன்பமும் தீவினையால் வருதலையும் அறியாதே அவை உலகத்தினை மக்கள் பலர் தமது முயற்சியால் வந்தன என கருதுவர் என்று எண்ணியே இது கூறப்பட்டது. ஒருவன் செய்த வினை தனது பயனை வழுவின்றி பயத்தல் அறத்தின் ஆகுமாதலான் இது அறத்தின் இறுதிக்கண் கூறப்பட்டது".*

*இது நியூட்டன் மூன்றாம் விதி போல தோன்றுகின்றதல்லவா? நல்வினை தருகின்ற ஊழ் ஆகூழ், போகூழ் அழிகின்ற ஊழ் சோம்பலைத் தருவது எனப் பாரதியார் இதனைப் பகுத்துரைக்கிறார்.*

ஒருவனது அறிவு பிறவியால் அவனுடன் தொடர்ந்து வருவது. அவன் நுண்ணிய நூலறிவு பெற்றாலும், அவனுடன் பிறந்த இயல்பான அறிவு அதனைக்கெடுத்து விடக் கூடும் என்று சொல்லுகிறார் வள்ளுவர்.

நாலடியார் 341 ஆவது பாடலில்

"கனம் பொழிந்து நூல் விரித்துக் காட்டினும் கீழதன்
மனம் புரிந்தவாறே மிகும்."

என்றபடி மனம் கல்வியறிவை வெல்லும் வாய்ப்புடையது என்று அறிந்து மிக எச்சரிக்கையுடன், நுண்ணுணர்வுடன் செயல்பட வேண்டும் என வள்ளுவர் சொல்லுகிறார் என்று உணரலாம்.

அது போன்றே வள்ளுவர் அடுத்த குறளில்

"இருவேறு உலகத்து இயற்கை திருவேறு
தெள்ளியர் ஆதலும் வேறு."

என்று கூறுமிடத்து, செல்வம் அடைவதற்கும், அறிவு அடைவதற்கும் வெவ்வேறு காரணங்கள் உள்ளன எனப் பாகுபடுத்துகிறார். இதனை விளக்குமிடத்து காளிங்கர், "இரு கூறுபாட்டிற்கும் உலகத்தார் ஊழாமா இயற்கை. எங்ஙனம் எனில், செல்வம் உண்டாதலும் ஒரு நல்லூழின் கூறு. கல்விபால் தெளிந்த நல்லறிவு உடையராதலும் மற்றொரு நல்விதிக்கு அமைந்த கூறு" என விளக்குகிறார்.

ஊழ் அதிகாரத்தில் நல்வினை, தீவினை எனப் பாகுபடுத்தாது ஆகூழ், போகூழ் என வள்ளுவர் வகைப்படுத்துகிறார். ஒருவன் செல்வந்தனாயிருத்தற்கும், வறுமையில் உறைவதற்கும், அறிவுடையவன் ஆதற்கும், அறிவிலன் ஆதற்கும் பெற்ற செல்வத்தை நுகர்தற்கும், நுகர இயலாமைக்கும், ஊக்கமுடையவனாய் இருத்தற்கும், சோம்பல் மிகுந்தவனாய் இருத்தற்கும் செல்வம் ஒருவனிடம் நிலைத்து நிற்றற்கும், நிலையாமல் இருப்பதற்கும் ஆகிய எல்லா நிலைக்கும்

காரணம் முறையே ஆகூழ், போகூழ் என வள்ளுவர் வகைப்படுத்துகிறார்.

வள்ளுவர் ஊழை 'இயற்கை' என்றே குறிப்பிடுகிறார். நமது வழக்கமான எதிர்பார்ப்பு என்னவெனில், தூயவன் செல்வம் பெற்றிருக்க வேண்டும், தீயவன் வறுமையுற்றிருக்க வேண்டும் என்பது. ஆனாலும் பல சமயங்களில் நடப்பு இதற்கு நேர்மாறாக உள்ளது. நமது எதிர்பார்ப்புக்கு நேர்மாறான இதற்கு காரணம் ஆராயப்புகுந்த வள்ளுவர், இதற்கு ஊழே காரணம் எனக் குறிப்பாலுணர்த்துவதாகத் தோன்றுகிறது. அதே சமயம் 'எத்துன்பம் வரினும், வறுமையுற்றிடினும் அறத்தையே பின்பற்றி வாழ்வேன்' என்னும் உயரிய நோக்கிலேயே வாழ்பவரை தெள்ளியர், தெளிந்தவர் என்று உயரிய அடைமொழியால் வள்ளுவர் குறிப்பிடும்போது, அவரது தேர்வு புலப்படுகிறது. அதே போன்று, அவ்வியான், செவ்வியான் என்று மற்றொரு குறட்பாவில் வகைப்படுத்துகிறார்.

செல்வமிக்கோர் பாண்டியன், கடை ஏழு வள்ளல்கள் போன்றோர் திருவும், தெளிந்த அறிவும் ஒன்றாகக் கொண்டிருந்ததைக் காண்கிறோம். இதற்குக் காரணம், போற்றற்குரிய வினைகள் அவன்பால் அமைந்திருந்தலே எனச் சுட்டுகிறார் வள்ளுவர்.

பால் பசுக்களின் நடுவில் சேர்த்துவிட்டாலும் இளங்கன்று தன் தாயைத் தேடிப் பெறுதலின் வலிமை உடையது, முன் செய்த வினையும் அவ்வாறே வினை இழைத்தவனைத் தேடி, அவனை அடைந்து உரிய பயனைக் கொடுக்க வல்லது என்று நாலடியார் கூறுகிறது.

'பல்லாவுள் உய்த்து விடினும் குழக்கன்று
வல்லதாம் தாய் நாடிக் கோடலைக் தொல்லைப்
பழவினையும் அன்ன தகைத்தே தான் செய்த
கிழவனை நாடிக் கொளற்கு' (நாலடியார் 101).

ஒருவன் நிழல் அவனைத் தொடர்ந்து சென்று நீங்காமல் அவனுடன் இருத்தல் போன்று தீவினை செய்தவனை விடாமல் பின் தொடர்ந்து சென்று பற்றி நின்று வருத்தும் என்ற கருத்தை குறட்பா கூறுகிறது.

போகூழால் மடியாகிய சோம்பல் தோன்றி, செயலின்மை ஏற்படலாம். அதையும் தமது மனத்திடத்தால் வெற்றிகொண்டு பொருளீட்ட இயலலாம். ஆயினும் அங்ஙனம் ஈட்டிய பொருளைத் துய்ப்பது, அதற்குரிய நல்வினை இருந்தாலன்றிச் செயல்படாது.

"வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது" (குறள் 377)

என்று ஒருவன் தான் ஈட்டிய பொருள் செல்வத்தையோ, அறிவுச் செல்வத்தையோ கொண்டு பயன் அடைய வேண்டுமெனில் நல்வினை செய்திருந்தால் மட்டுமே இயலும் என்கிறார் செந்நாப்போதார். எப்பொழுதும் நல்வினையே செய்ய வேண்டும். அப்பொழுதுதான் மனிதன் இன்பம் துய்க்க இயலும் என மனிதகுலத்தின் நல்வாழ்வுக்கு வள்ளுவர் கூறும் அறிவுரையாக அமைகிறது. அதேபோன்று, இன்பத்தையும், துன்பத்தையும் சமநிலையில் ஏற்கும் மனப்பரிமாணம் ஏற்பட வேண்டும் என்பதை 379 ஆவது குறள் வற்புறுத்துகிறது. எனவே வள்ளுவர் கூறும் ஊழ், சமயநூல்கள் குறிப்பிடும் *fatalism* போன்றல்லாது, மனிதனுக்கு எச்சரிக்கைக் காட்டியாக அமைந்து அவனை நல்வழியில் செலுத்தி மனத்தை எவற்றையும் ஏற்கும் பக்குவத்தை அளிக்க முற்படுகிறது.

வினைப்பயனால் தமக்குரிய பலன்களில் நிற்றலும், ஊழ் அல்லாத பொருட்கள் வருந்திக் காப்பினும் நம்மை விட்டு நீங்கும் என்பதும் வள்ளுவர் கருத்து. பெரும்பிரிவிலும், உற்ற பிரிவினாலும் வருத்தமுறும் மனிதன் மனதிற்கு மருந்தாக அமைகிறது. இதே கருத்து

அறநூல்கள் மட்டுமன்றி காவியங்களிலும் விரவிக் கிடப்பதைக் காணலாம்.

"பெருமுழங்கு திரை வரைகள் நீந்திப் பிணியுறினும்
திருமுயங்கில் இல்லையெனில் இல்லை பொருளீட்டம்
ஒரு முழமும் சேறலிரேனும் பொருளார்க்கு
வரும்வழி வினையமுழந்து வாழ் தவம் மாதோ!"

(சீவக சிந்தாமணி 848.2556)

"ஆகுவதாகும் காலத்து அழிவதும் அழிந்து சிந்திப்
போடுவது அயலே நின்று போற்றினும்
போதல் செய்யும்!"

(கம்பராமாயணம் கும்பகருணன் 165)

தீயவை, தீயினும் அஞ்சப்படும். ஏனெனில் வேறோரிடத்தில், வேறோர் காலத்தில் வேறோருடம்பில் இருப்போனை அடைந்து வருத்தும் திறன், தீவினைக்கு உண்டு, தீயிற்கு இல்லை. ஆகையால், வள்ளுவர் ஊழ்வினை பற்றிக் குறிப்பிடுவது, மனிதன் நல்வினைகளையேச் செய்ய வேண்டும், தீய செயல்களை ஒதுக்க வேண்டும்' என்கிறார். ஏனெனில், நல்வினைகளும், தீவினைகளும் காலம், இடம் ஆகிய பரிமாணங்களைத் தாண்டிச் செயல்படுவன. எனவே தீவினைக்கு அஞ்சுக என்று அறிவுறுத்துகிறார் எனலாம்.

திருவள்ளுவர் ஊழ் என்ற சொல்லை எந்தப் பின்னணியில், எந்த அடிப்படையில், எப்பொருளில் வழங்கிச் செய்துள்ளார் என்பதை உரையாசிரியர்கள் பலர் அவரவர் கோட்பாடுகளுக்கும், சார்ந்த நம்பிக்கைக்கும், வாழ்ந்த காலத்திற்கும் ஏற்ப உணர்ந்து உரை செய்துள்ளனர் என்பதை குறள் அறிஞர் என்.சு. இராமலிங்கம் "இறைமையும் முறைமையும்" என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். ஊழ் அதிகாரத்தில் பத்துக் குறளிலும் முனிவினை, பழவினை, முற்பிறப்பு என்பதைத் திருவள்ளுவர் தனியாகக் கூறவில்லை. எனினும், உரையாசிரியர்கள் ஊழ் அதிகாரத்திற்கு

முன்னுள்ள துறவறவியல் பகுதியைச் சார்ந்த நிலையாமை, துறவு, மெய்யுணர்தல், அவா அறுத்தல் போன்ற அதிகாரங்களில் கூறப்பட்டுள்ள கருத்துக்களை எல்லாம் ஆழ்ந்து ஆய்ந்து ஊழ் பற்றித் தத்தம் கருத்துக்களை வெளியிட்டிருக்கலாம். எடுத்துக்காட்டாக, புலவர் இராமலிங்கனார் தேர்ந்தெடுத்த பாக்கள்:

"அஃகா இயல்பிற்று செல்வம் அது பெற்றால்
அற்குப ஆங்கே செயல்" (குறள் 333)

"நாளென ஒன்று போல் காட்டி உயிர் ஈரும்
வாளது உணர்வார்ப் பெறின்." (குறள் 334)

"ஒரு பொழுதும் வாழ்வதறியார் கருதுப
கோடியும் அல்ல பல" (குறள் 337)

என்றும் நிலையாமை அதிகாரக் குறட்பாக்களிலும்,
"அடல் வேண்டும் ஐந்தன் புலத்தை" (343)
"யான் எனது என்றும் செருக்கறுப்பான்" (346)
"தலைப்பட்டார் தீரத்துறந்தார்" (348)
"பற்றுக பற்றற்றான் பற்றினை" (350)
என வரும் துறவு அதிகாரக் குறட்பாக்களிலும்
"மருள்நீங்கி மாசறு காட்சி யாருக்கு" (152)
"ஐயத்தில் நீங்கித் தெளிந்தார்" (153)
"மெய்ப்பொருள் காண்பது அறிவு" (355)
"கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்" (356)
"பெர்த்துள்ள வேண்டா பிறப்பு" (157)
"பிறப்பென்னும் பேதமை நீங்க" (358)
"சார்புணர்ந்து சார்பு கெட ஒழுகின்" (359)
என வரும் மெய்யுணர்தல் அதிகாரக் குறட்பாக்களும்,
"வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை" (361)
"வேண்டாமை அன்ன விழுச்செல்வம்" (363)
"தூய்மை என்பது அவாவின்மை" (364)

*"அற்றவர் என்பர் அவா அற்றார்" (365)*

*"இன்பம் இடையறாது ஈண்டும்" (369)*

*"ஆரா இயற்கை அவா" (370)*

என வரும் அவா அறுத்தல் அதிகாரச் சொற்றொடர்களையும் சிந்தித்துத் தொடர்பு கண்டு அறிஞர் ஊழ் அதிகாரத்திற்கு உரை கண்டிருப்பதாகத் தோன்றுகின்றது.

அதே போன்று சமயச்சார்பற்ற அறிஞர்கள் முயற்சியாலும் இடைவிடாத உழைப்பாலும் மனிதன் வெற்றி காண முடியும். வலிமை மிக்க இயற்கையையும் எதிர்த்துப் போராடி வெற்றிகாண முடியும் என்ற உயரிய கருத்துக்கு சான்றாக,

*"செய்தக்க அல்ல செயக்கெடும்" (466)*

*"எண்ணித் துணிக கருமம்" (467)*

என்ற சொற்றொடர்கள் வரும் தெரிந்து செயல்வகை அதிகாரமும், வலியறிதல் (48 வது அதிகாரம்), காலமறிதல் (49 வது அதிகாரம்), இடமறிதல் (50 வது அதிகாரம்), தெரிந்து தெளிதல் (51 வது அதிகாரம்), தெரிந்து வினைசெயல் வகை (52 வது அதிகாரம்) என்ற அதிகாரங்களையும், "அடங்கா ஊக்கமுடையான்" (594 குறள்), "சிதைவிடத்து ஒல்கார் உரவோர்" (597), "உரம் ஒருவருக்கு உள்ள வெறுக்கை" (600) என வரும் ஊக்கமுடைமை அதிகாரச் சொற்றொடர்களையும்,

*"அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்" (611)*

*"முயற்சி திருவினையாக்கும்" (616)*

*"பொறியின்மை யார்க்கும் பழியன்று" (618)*

*"ஊழையும் உப்பக்கம் காண்பர்" (620)*

என வரும் ஆள்வினை உடைமை அதிகார சொற்றொடர்களையும்,

*"வினைநலம் வேண்டிய எல்லாம் தரும்" (651)*

*"வினைதிட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்" (661)*

*"எண்ணிய எண்ணியாங்கு எய்துவ" (669)*

*"தூங்குக தூங்கிச் செயற்பால" (672)*

*"பார்த்துச் செயல்" (676)*

என வரும் வினைத்தூய்மை, வினைதிட்பம், வினை செயல்வகை என்ற அதிகாரச் சொற்றொடர்களையும் ஆழ்ந்து சிந்தித்துச் செயல்முறை வழி ஊழ் அதிகாரத்திற்கு உரைகள் கண்டுள்ளனர்.

வள்ளுவம் மிகச் சிறந்த வாழ்க்கை வழிநூல். ஊழ்வினை கடவுளின் கட்டளையே தவிர நமக்கு வழிகாட்டி அல்ல. நமக்கு வழி காட்டுவது அறம். ஊழ்வினை மிகவும் வலிமை வாய்ந்தது. அதை அறியவும் முடியாது, தடக்கவும் முடியாது. ஆனால் அறத்தை அறியலாம். வலிமையற்றவர் துன்புறுத்தப்படும்போது அவர்கள் ஊழ்வினை என்று வாளாமல் தீமையைத் தடுக்க வேண்டும். விளைவு ஊழின் கையில் என்ற மனப்பக்குவமும் இருக்க வேண்டும். இதுவே வள்ளுவர் காட்டும் நெறியும், பகவான் காட்டும் வழியும் ஆகும்.

பகவான் பணியில்,

தங்கள்

ராம் மோஹன்

---

## கிரிவலம் வரும் பௌர்ணமி நாட்கள் 2026

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| *அக்டோபர்* | 25 | *ஞாயிறு* | *காலை 11:25* | 26 | *திங்கள்* | *காலை 10:09* |
| *நவம்பர்* | 23 | *திங்கள்* | *காலை 11:00* | 24 | *செவ்வாய்* | *காலை 09:00* |
| *டிசம்பர்* | 23 | *புதன்* | *காலை 9:57* | 24 | *வியாழன்* | *காலை 07:40* |

# பேரமைதி நிலவிய பெருநாட்கள்

## மௌனிசாது

## மொழிமாற்றம்: ராம் மோஹன்

### 43. பிரியாவிடை

ஆலய மண்டபத்திலிருந்து நான் திரும்பிக் கொண்டிருக்கிறேன்; அங்கே மக்கள் ஊர்வலமாக மகரிஷியின் இருக்கையைக் கடந்து சென்று கொண்டிருந்தனர். நான் அதில் கலந்துகொள்ளவில்லை. பார்வையாளர்களின் வருகை நிற்கும் (மாலை 6 மணி) வரை நான் காத்திருக்கிறேன். ஆறு மணி முதல் ஏழரை மணி வரை குரு பெரும்பாலும் தனித்திருப்பார். எனவே அவரை அணுகி விடைபெற இதுவே சிறந்த நேரமாகும்.

இரவு வழக்கத்திற்கு மாறாகக் கடுமையான வெப்பத்துடன், காற்று இன்றி, வழக்கமாக வீசும் குளிர்ச்சியான கிழக்குக் காற்று சிறிதும் வீசாமல் இருக்கிறது. சாலை வெறிச்சோடியிருக்கிறது, ஆசிரம நுழைவாயிலில் யாருமில்லை, அதன் பெரிய முற்றத்தில் பல மோட்டார் கார்கள் மட்டுமே நிற்கின்றன.

கோயில் மண்டபத்தில் அந்திப் பொழுது கவிழ்ந்துள்ளது. நான் கதவருகே ஒரு கண நேரம் நிற்கிறேன். மகரிஷி தனது வழக்கமான தோரணையில், தலையணைகளில் சாய்ந்தவாறு வெறுவெளியை நோக்கிக் கொண்டிருக்கிறார். இளம் தொண்டர்களில் ஒருவர் ஒரு மூலையில் அமர்ந்திருக்கிறார், அங்கே நிலவும் இருளில் அவர் கிட்டத்தட்ட கண்ணுக்குத் தெரியவில்லை. மண்டபத்தில் வேறு யாருமில்லை.

மகரிஷி இப்போது என்னைப் பார்க்கிறார்; ஒரு சிறிய புன்னகை தோன்றுகிறது. நான் அவரை அணுகுகிறேன், ஆனால் பிரியாவிடைக்காகவும் கடைசி வேண்டுகோள்களுக்காகவும் நான் மனதுக்குள் நன்கு தயார் செய்து வைத்திருந்த சொற்கள் அனைத்தும் என் நினைவிலிருந்து மறைந்து விடுகின்றன. அது வெறுமையாகி விடுகிறது, ஒரு சிறிய எண்ணம் கூட அங்கே இல்லை.

நான் நமஸ்கரித்து விட்டு அவருக்கு மிக அருகில் நிற்கிறேன். அவர் என் கண்களைப் பார்க்கிறார். நான் அவருடைய கண்களின் ஒளியில் மூழ்குகிறேன். இப்போது சொற்கள் தேவையில்லை. என் இதயத்தை அந்தப் புனிதர் படிக்கிறார் என்பதை நான் அறிவேன். நான் அவற்றை ஒன்று சேர்ப்பதற்கு முன்பே என் மனதில் உள்ள ஒவ்வொரு சொல்லையும் அவர் பார்த்துவிட்டார்.

ஆழத்தில் ஏதோ ஒரு சோகம் என்னுள் படபடக்கிறது. என் குருவாகவும் நண்பராகவும் விளங்குபவரை, உலகங்கள் அனைத்தையும் தேடினாலும் அவரைப் போன்ற ஒருவரை நான் இனி எங்கும் காண முடியாத அந்த மனிதரை நான் கடைசி முறையாகப் பார்க்கிறேன். எனினும் அவரிடமிருந்து நுட்பமான ஆனால் தவிர்க்க முடியாத வலிமை வாய்ந்த அலை ஒன்று வெளிப்படுகிறது. அது இந்த மேகத்தை அடித்துச் சென்று என் முழு உடலையும் ஊடுருவுகிறது. இப்போது என் உணர்வு தூய்மையானதாகவும் தெளிவானதாகவும் இருக்கிறது; நான் அவருக்கு முன் இப்படித்தான் நிற்க விரும்பினேன் என்று உணர்கிறேன்.

அவருடைய அழகிய முகத்திலிருந்து சொற்களால் வெளிப்படுத்துவதற்கான ஒரு வகையான ஊக்கம் வெளிப்படுவதைக் காண்கிறேன். சரி, தேவைப்பட்டால்

முயற்சிப்பேன் என்று எனக்கு நானே சொல்லிக் கொள்கிறேன்.

நான் ஆசிரமத்தை விடுத்து நான் புறப்பட வேண்டியிருப்பதால் அவருடைய அனுமதியை வேண்டுகிறேன் என்றும், எனது நிகழ்காலத்திற்கும், எதிர்காலத்திற்கும், என்றைக்கும் அவருடைய ஆசியை நாடுகிறேன் என்றும் அவரிடம் மெதுவாகவும் தெளிவாகவும் சொல்லத் தொடங்குகிறேன். அவருடைய கண்கள் இன்னும் ஒளிர்கின்றன, மீமானுடக் கருணையை வெளிப்படுத்தும் அந்த முகம் இன்னும் தீவிரமடைவது போல் தெரிகிறது. அவர் எனக்கு ஆசியை வழங்குகிறார். வெளிப்படுத்தப்படாத எனது அடுத்த வேண்டுதலையும் அவர் காண்கிறார் என்பதை நான் அறிவேன். நான் எந்தச் சொற்களையும் கேட்கவில்லை, ஆனாலும் என் சொந்த வேண்டுதலின் அர்த்தம் எனக்குப் புரிகிறதா என்பதை அவர் கேட்பதை நான் உணர்கிறேன்.

என் உதடுகளை அசைக்காமலேயே, நான் அவருக்கு என் பதிலை அளிக்கிறேன். ஆனாலும் எல்லாமே மிகவும் இயல்பானதாகவும், எளிமையானதாகவும், உண்மையானதாகவும் இருப்பதால், நான் இங்கே நிற்பதைவிட இந்த மௌனமான உரையாடலைத்தான் நான் சந்தேகப்படுவேன். ஒரு குறுகிய அமைதி தொடர்கிறது.

ஆ, என் இதயத்தில் வேறு எந்த விருப்பமும் இல்லாமல், இத்தகைய நித்திய காலத்திற்கும் முடிவில்லாமல் அவருக்கு அருகில் இப்படி நிற்க முடிந்தால் நன்றாக இருக்கும். நிமிடங்கள் கடப்பதுபோல் தோன்றினாலும், விநாடிகள் மட்டுமே கடக்கின்றன.

நான் அவரிடம் வைக்க விரும்பிய கடைசி வேண்டுகோள், (மகரிஷியின் போதனைகளின்படிப் பார்த்தால்) கண்ணுக்குத் தெரியும் இந்த மாயையான உலகத்திற்குக் கொடுக்கப்படும் ஒரு சலுகை

போன்றதுதான். காலங்காலமாகத் தொடரும் பாரம்பரியத்தின்படி, குருவின் அருள் தன்மீது இருப்பதைச் சீடன் தொட்டு உணர்வதற்கான ஒரு அடையாளமே அது. ஆனால், மகரிஷி எப்போதுமே இதுபோன்ற கோரிக்கைகளுக்குச் செவிசாய்ப்பது இல்லை; அத்தகையவற்றுக்கு அவர் என்ன பதில் அளித்திருப்பார் என்பதை அவருடைய வாழ்க்கை வரலாறுகளிலும் நான் படித்திருக்கிறேன். இதன் மூலம், புறத் தோற்ற விஷயங்களில்கூட அவர் எவ்வளவு கவனமாகவும் கண்டிப்புடனும் இருந்தார் என்பதைப் புரிந்து கொண்டேன்.

ஆனால் இதோ இப்போது, நான் திறந்த இதயத்துடன் அவருக்கு முன் நிற்கும்போது, மகிழ்ச்சியுடனும் உறுதியுடனும் நிகழும் அனைத்தையும் உணரும்போது, நான் எவ்வாறு மறுக்கப்பட்டிருக்க முடியும்?

நான் சற்று தயக்கத்துடன் என் வாக்கியத்தைத் தொடங்கும்போது, என்னை ஊக்குவிக்க அவரது அற்புதமான புன்னகை மலர்கிறது.

நான் என் தலைகுனிந்து என் நெற்றியில் அவரது கையின் ஸ்பரிசத்தையும், என் தலையின் மீது அவரது விரல்களின் மென்மையான ஸ்பரிசத்தையும் உணர்கிறேன். சக்தி மற்றும் தூய்மையின் நுட்பமான ஒரு மின்னோட்டம் என் முழு உடல் வழியாகவும் செல்கிறது.

ஒரு மின்னல் கீற்றைப் போல, இந்த நொடியின் சக்தி வரும் ஆண்டுகளில் அனைத்திலும் என்னைத் தாங்கும் என்பதையும், அதன் ஒளி என்றென்றும் என் வாழ்வில் பிரகாசிக்கும் என்பதையும் நான் உணர்கிறேன்.

நாங்கள் இனி பேசுவதில்லை. நான் கடைசி முறையாக வணக்கம் செலுத்துகிறேன், ஒப்புதல் அல்லது அனுமதியைக் குறிக்கும் முறையில் அவர்

தலையசைக்கிறார், மேலும் என் இதயத்தின் ஆழத்தில் அவரை என்றென்றும் பொறித்துக்கொள்ளும் வகையில் அவருடைய முகத்தை உன்னிப்பாகப் பார்த்தவாறு கதவை நோக்கி மெதுவாகப் பின்வாங்குகிறேன்.

தோட்டத்தின் இருண்ட பாதைகளின் வழியாக மகிழ்ச்சியான அமைதியுடன் என் அறைக்குத் திரும்பி நடக்கிறேன். ஆசிரம நண்பர்கள் சிலர் அமைதியாக என் வாயில்வரை என்னுடன் வருகிறார்கள், ஏனென்றால் இந்தியர்களுக்குச் சோகமான அல்லது புனிதமான தருணங்களில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது நன்றாகத் தெரியும்.

> *“குருவிடம் இருந்து பிரிவது இனி ஒருபோதும் சாத்தியமில்லை என்றே உள்ளத்தில் உள்ளிருந்து ஒரு குரல் சொல்கிறது; அதுவே என் வாழ்விலும் உண்மையாகியிருக்கிறது.”*

*(தொடரும்)*

**குறைகளைச் சுட்டிக்காட்டாமல் தாயன்புடன் அணைத்துக்கொள்ளும் கருணை!**

*“முக்கிலன் முன்காட்டு முகுரமா காதெனைத்*
*தூக்கி யணைந்தரு ளருணாசலா”*

*“அருணாசலா! வெறும் கண்ணாடியாக நின்று, குறைகளும் அறியாமையும் நிறைந்த என் முகத்தை எனக்குக் காட்டி வேதனைப்படுத்தாதே!*

*ஒரு தாய் தன் குழந்தையின் குறைகளைப் பாராமல் ஓடிவந்து வாரி அணைத்துக் கொள்வாளே... அதுபோல, எளியவனான என்னைத் தூக்கி உன்னோடு அணைத்துக் கொள்!”*

*இறைவன் நம் தவறுகளையும் குறைகளையும் பட்டியலிட்டு ஏளனம் செய்பவன் அல்ல; அத்தனை குறைகளோடும் நம்மை அப்படியே அள்ளி அணைத்துக் கொள்ளும் பேரன்பு அவன்.*



# நிராலம்பம்: பற்றுக்கோடற்ற பரவெளி

## D. தியாகராஜன்

இயற்கையின் பேரிலக்கணம் பந்தங்களாலும் பிணைப்புகளாலும் பின்னப்பட்ட ஒரு பெருவலை. ஒரு சிறு செடியோ அல்லது கொடியோ, அது வளரத் துவங்கும்போது, தான் வளரத் துணையாக ஏதாவதொரு மரத்தின் கரங்களைப் பற்றிக்கொள்கிறது. கருவறையிலிருந்து வெளிவரும் உயிர், தாயின் மடியையும் தந்தையின் அரவணைப்பையும் நாடுகின்றது. அறிவைத் தேடும் மாணவன், ஆசிரியரின் வழிகாட்டுதலைப் பற்றிக் கொள்கிறான். விலங்குகளும் அவ்வாறே இயங்குகின்றன. இப்படி, பிரபஞ்சத்தின் ஒவ்வொரு அசைவும் ஏதோ ஒன்றையொன்று சார்ந்து நிற்கும் 'ஆலம்பனங்களால்' (பற்றுக் கோடுகளால்) கட்டமைக்கப்பட்டே இயங்குகின்றன.

ஆனால், இத்தனை சார்ந்து நிற்றல்களுக்கு மத்தியிலும், பகவான் ஸ்ரீ ரமணர் முன்வைக்கும் உபதேசம் மட்டும் முற்றிலும் வேறானது. 'சும்மா இரு' – இதுவே அவர் அருளிய தலையாய மந்திரம். அத்வைத வேதாந்தத்திலும், பகவான் ஸ்ரீ ரமண மகரிஷிகளின் உபதேசங்களிலும் மிக முக்கியமான ஆன்மீக உச்சமாக விளங்கும் 'நிராலம்பம்' (நிர் + ஆலம்பம்), எந்தவிதமான ஆதரவும் அல்லது ஆதாரமும் அற்ற ஒரு பரவெளியைக் குறிக்கிறது. புற உலகிற்குத் தேவையாயிருக்கும் பற்றுக் கோடுகள், அக உலகிற்குத் தடையாக மாறும்போது, 'நிராலம்பம்' எனும் அந்தத் துரிய நிலை ஏன் அவசியமாகிறது? அதன் ஆழமான உட்பொருளையும், அதை அன்றாட வாழ்வில் எப்படிக்

கையாள்வது என்பதையும் இந்தக் கட்டுரையில் விரிவாகக் காண்போம்.

*1. சொற்பொருள் விளக்கம்:*

*லம்பனம்: ஆதரவு, பற்றுக்கோடு, அல்லது ஒரு பொருளைச் சார்ந்து நிற்றல். (எ.கா: தியானம் செய்ய ஒரு உருவம், ஒரு மந்திரம் அல்லது ஒரு பெயர் தேவைப்படுவது).*

*நிராலம்பம்: எந்தவொரு பற்றுக்கோடும் இன்றி இருப்பது. மனம் எந்தவொரு எண்ணத்தையும், உருவத்தையும், ஏன் ஆன்மாவைப்பற்றிய சிந்தனையைக் கூட பற்றிக்கொள்ளாமல், தன்னிச்சையாகத் தானாகவே இருக்கும் நிலை.*

*2. வேதங்கள் மற்றும் உபநிஷத்துகளில் நிராலம்பத் தத்துவம்:*

*நிராலம்பம் என்பது பிற்காலத் தத்துவக் கோட்பாடு மட்டுமல்ல; சநாதன தர்மத்தின் வேரான வேதங்களிலும் உபநிஷத்துகளிலும் இதுவே முதன்மையாக வலியுறுத்தப்பட்டுள்ளது.*

*நிராலம்ப உபநிஷத்:*

*சந்நியாச நெறியையும் அத்வைத வேதாந்தத்தையும் விளக்கும் முக்கியச் சிறிய உபநிஷத்துகளில் இதுவும் ஒன்றாகும். இது கேள்விபதில் வடிவில் (41 கேள்விகள்) பிரம்மம், ஜீவன், பந்தம், முக்தி போன்ற பல தத்துவங்களை விளக்குகிறது.*

*ஆதாரமற்ற ஆன்மா: இந்த உபநிஷத்தின்படி, ஆன்மா (ஆத்மா) என்பது உடல், மனம், உலகம் போன்ற எந்தவொரு புற அல்லது அகப் பற்றுக்கோடும் இன்றி, சுயமாக ஒளிரும் தூய சேதனம் ஆகும்.*

*பந்தம் மற்றும் முக்தி வரையறை: உலகப் பொருட்கள் மீதும் உடல் மீதும் உள்ள பற்றே*

'பந்தம்' என்கிறது இந்த உபநிஷத். எவ்வித ஆதாரமும் பற்றுக்கோடும் இன்றி, எல்லாவற்றிற்கும் அடிப்படையான பிரம்மத்துடன் தன்னை அடையாளப் படுத்துவதே உண்மையான 'முக்தி' ஆகும்.

துறவறம்: "நான் பிரம்மம்" என்ற உறுதியோடு, 'நான்' மற்றும் 'எனது' என்ற அகங்கார பற்றுக் கோடுகளை முற்றிலுமாக விடுவிப்பதே உண்மையான துறவு அல்லது நிராலம்ப நிலை என்கிறது.

*பகவத் கீதையில் நிராலம்பத் தத்துவம் (அசங்கம்):*

பகவத் கீதையில் 'நிராலம்பம்' என்ற சொல் நேரடியாகக் கையாளப்படவில்லை என்றாலும், அத்தகைய பற்றற்ற மற்றும் ஆதாரமற்ற நிலை பல இடங்களில் வலியுறுத்தப்பட்டுள்ளது. மனிதனைப் பந்தப்படுத்தும் உலக வம்சத்தை உறுதியான 'அசங்க' (பற்றின்மை/ஆதாரமின்மை) என்னும் ஆயுதத்தால் வெட்டி வீழ்த்த வேண்டும் என்று பகவத் கீதை 15வது அத்தியாயத்தில் (15.3) கிருஷ்ணர் கூறுகிறார். அதாவது எந்தப் பற்றுக்கோட்டிலும் மனம் சிக்காமல் இருப்பதே விடுதலை (அசங்க சஸ்திரம்).

*இதர உபநிஷத்துகள் மற்றும் வேதாந்த நூல்கள்:*

யோக வாசிஷ்டம்: ஸ்ரீராமருக்கு வசிஷ்ட முனிவர் உபதேசிக்கும் போது, உலகியலில் தீவிரமாகச் செயல்பட்டாலும், உள்ளுக்குள் எந்தப் பற்றுக்கோடும் இல்லாமல் (நிராலம்பமாக) ஒரு நடிகர் போல நாடகத்தை நடத்தும் படியும், மனதை எதிலும் பற்ற வைக்காமல் சாட்சியாக இருக்கச் சொல்லியும் அறிவுறுத்துகிறார்.

அத்வைதப் பார்வையில்: சங்கராச்சாரியாரின் பிரம்ம சூத்திர மற்றும் உபதேச சாஹஸ்ரி போன்ற நூல்களில், ஆத்மா என்பது எதையும் சாராதது (நிராலம்பம் அல்லது அசங்கம்) என்றும், உடலும் உலகமும் மாயையால் கற்பிக்கப்பட்டவை என்றும் கூறப்பட்டுள்ளது.

*3. ரமண மகரிஷியின் பார்வையில் நிராலம்பம்:*

*ரமணரின் மகா யோகத்தில், சாதகர் ஆரம்பத்தில் 'நான் யார்?' என்ற விசாரணையின் மூலம் மனதை ஒருமுகப்படுத்துகிறார். ஒரு கட்டத்தில் மனம் முழுமையாக ஒடுங்கி, எவ்விதமான எண்ணங்களும் இல்லாத அமைதியை அடைகிறது.*

*ஆதாரமற்ற நிலை: ஆரம்ப நிலையில், ஒரு சாதகன் இருதயத்தை (Heart) ஆதாரமாக வைத்துக்கொண்டு தியானம் செய்வான். ஆனால், மேலோங்கிய நிலையில், இருதயம் என்று ஒரு இடத்தைக்கூட கற்பனை செய்யாமல், எவ்வித இடமும் அல்லது பொருளும் சார்ந்து நிற்காமல் மனம் தானாகவே இருக்கும் நிலையே 'நிராலம்ப சமாதி' அல்லது 'நிராலம்ப நிலை' ஆகும். மகா யோக நூலில் (பக்கம் 69) இது படி 7 (Step 7) ஆக விவரிக்கப்பட்டுள்ளது: "நிராலம்பம் (supportless), அதாவது மனம் இருதயத்திலோ அல்லது வேறு எந்த இடத்திலோ நிலைக்காமல், எந்தவிதமான பற்றுக்கோடும் இன்றி எண்ணமற்ற நிலையில் இருப்பது". இந்த நிலையில் மனம் உருவங்களையோ, சிந்தனைகளையோ, குறிப்பிட்ட எந்த இடத்தையும் சார்ந்து இருக்காது.*

*எண்ணமற்ற நிலை: "நான் பிரம்மம்", "நான் ஆத்மா" என்று கூட நினைக்காமல், அந்த 'நான்' என்ற எண்ணம் கரைந்து, மனம் எந்த ஒரு ஆதாரத்தையும் பற்றாமல் சூனியமாகவோ அல்லது முழுமையாகவோ (Pure Being) இருப்பதுதான் இது.*

*4. ரமணர் அருளிய பாடல்களில் நிராலம்ப நிலை:*

*பகவான் ரமணர் அருளிய பாடல்களும் இந்த ஆதாரமற்ற வெளியின் அழகை நயம்படப் பேசுகின்றன.*

*சும்மா இருத்தல்: வாக்கு, மனம், உணர்வுகள் யாவும் அடங்கி, எவ்விதப் பற்றுமின்றி அமைதியாக இருக்கும்*

நிலையை 'அருணாசல அக்ஷரமணமாலை'யில் பகவான் குறிப்பிடுகிறார்:

"சுகக்கடல் பொங்கச் சொல்லுணர் வடங்கச்
சும்மா பொருந்திடங் கருணாசலா" (பாடல் 31).

பேச்சற்ற மௌன முத்திரையால் 'பேச்சு மூச்சற்றுச் சும்மா இரு' என்று அருணாசலன் உணர்த்தியதை,

"சொல்லாது சொலிநீ சொல்லற நில்லென்று
சும்மா விருந்தா யருணாசலா" (பாடல் 36)

என்றும் அவர் பாடுகிறார்.

உபாதிகளை நீக்குதல்: மனம் ஏதேனும் ஒன்றைச் சார்ந்தே (ஆலம்பனம்) இயங்கும் தன்மையுடையது. இந்தச் சார்புகளை அகற்றுவதே உபதேச உந்தியாரின் சாரமாகும்:

"வெளிவிட யங்களை விட்டு மனந்தன் னொளியுரு வோர்தலே... உண்மை யுணர்ச்சியாம்"

(உபதேச உந்தியார் 16).

புற விஷயங்களைப் பற்றுவதை விட்டுவிட்டு, மனம் தனது சுய அறிவொளியை ஆராய்வதே உண்மையான உணர்வாகும். மேலும்,

"தன்னை யுபாதிவிட் டோர்வது தானீசன் றன்னை யுணர்வதாம்..." (உபதேச உந்தியார் 25)

என்பார்.

தன்மய நிஷ்டை: மனம் தன் மூலத்தைத் தேடிச் செல்லும்போது, அதைப் பற்றிக்கொண்டிருந்த 'நான்' என்ற அகங்காரம் அழிகிறது.

"தானா யிருத்தலே தன்னை யறிதலாந் தானிரண் டற்றதால்..." (உபதேச உந்தியார் 26).

மெய்ப்பொருளானது காண்பவன், காணப்படுவது என இரண்டாக இல்லாமல், எவ்வித ஆதாரமுமின்றி

*'தானாகவே இருத்தல்' (Pure Being) நிலையே தன்மய நிஷ்டை ஆகும்.*

### *5. ஆகமங்களும் நிராலம்ப யோகமும் (தேவிகாலோத்தரம் மற்றும் சர்வ ஞானோத்தரம்):*

*தேவிகாலோத்தரம் (ஞானாசார விசார படலம்): விரூபாக்ஷ குகையில் பகவான் வசித்த காலத்தில், விருத்தாச்சலத்தில் உள்ள ஒரு உறவினர் வீட்டின் பனை ஓலைச் சுவடிகளிலிருந்து பெறப்பட்டுத் தமிழாக்கம் செய்யப்பட்ட ஆகமமாகும். முதிர்ந்த ஆன்மாக்கள் அடைய வேண்டிய உன்னத ஞானத்தையும் அவர்களது வாழ்க்கை முறையையும் விளக்கும் இது, ஆன்மீக ஞானத்தின் சாரமாகும்.*

*இங்கு தேவிகாலோத்தரத்தின் பாடல் 13 மற்றும் அதன் பொருளும் நிராலம்ப நிலையை மிகத் துல்லியமாக விளக்குகிறது:*

*இருக்கின்றே னென்கலையோ டேய்ந்தசை தன்ய*
*வுருசத்தி யஃதா லொளிரும் – பிரபஞ்சஞ் சர்வஞ்சத்*
*தித்யானஞ் சார்நிட் களஞானஞ் சர்வ*
*நிராலம்பந் தான்.*

*பொருளுரை: "இருக்கின்றேன்" என்ற தூய உணர்வே 'சக்தி' எனப்படும்; இந்த சக்தியின் பிரகாசத்தினாலேயே பிரபஞ்சமே இயங்குகிறது. எனவே, சர்வ பிரபஞ்சமும் இந்தச் சக்தியின் சங்கற்பமே ஆகும். இந்தச் சக்தியின் வெளிப்பாடான மனம், சகல பற்றுக்களையும் அறுத்து நிற்பதே அடைய வேண்டிய நிஷ்கள ஞானமாகும்; அந்த உருவமற்ற ஞானமே ஆன்மாவாகும்.*

*சர்வ ஞானோத்தரம் (ஆன்ம சாட்சாத்காரப் பிரகரணம்): ஆன்ம சாட்சாத்காரத்தை விளக்கும் 62 வெண்பாக்களைக் கொண்ட இப்பகுதியை பகவான் தாமாகவே விரும்பித் தமிழில் மொழிபெயர்த்தார். எவ்விதமான தியானப் பொருளையும் கற்பனை*

செய்யாமல், மனதை சூனியத்திலோ அல்லது தூய இருப்பிலோ நிறுத்தும் நிராலம்ப முறையை இந்த ஆகம நூல்கள் மிகத் தெளிவாக விளக்குகின்றன.

**6. தமிழ் இலக்கிய மற்றும் பக்தி நெறியில் நிராலம்பம்:**

வேதங்களும் ஆகமங்களும் விளக்கும் இந்த நிராலம்பத் தத்துவத்தை, தமிழ் பக்தி இலக்கியங்களும் ஞானக் குரவர்களும் மிக எளிய அழகிய சொற்களில் பாடிச் சென்றுள்ளனர். மாணிக்கவாசகர், தாயுமானவர் மற்றும் அருணகிரிநாதர் ஆகியோரின் திருவாக்குகளில் பற்றற்ற நிலையின் ஆன்மீகச் சொரூபத்தைக் காணலாம்:

*திருவாசகம்:*

மனித மனத்தின் பற்றுகளை அறுத்து, இறைவனோடு இரண்டறக் கலக்கும் 'பற்றற்ற நிலை' திருவாசகத்தில் மிக அழகாகப் பாடப்பட்டுள்ளது. சிவபெருமானை முழுமையாகப் பற்றிக்கொள்வதற்காக, உலகியல் பற்றுகளைத் துறப்பதையே மாணிக்கவாசகர் வலியுறுத்துகிறார்.

பற்றுகளிலிருந்து விடுதலை: "பற்று அற்றேன் பற்றினைப் பற்றினேற்கு கண்டாய்" — உலகப் பற்றுகள் அனைத்தையும் விடுத்து, அந்தப் பற்றுகளுக்கெல்லாம் மூலமான இறைவனின் திருவடிப் பற்றை மட்டும் பற்றிக்கொண்டதாக அவர் கூறுகிறார். எந்தவொரு புறப் பற்றுக்கோடும் இன்றி, ஈசனின் திருவடியை மட்டும் ஆதாரமாகக் கொள்வதே உண்மையான நிராலம்ப நிலையாகும்.

அகங்காரப் பற்றை விடுதல்: "யான் எனது என்னும் செருக்கு அறுப்பான்" — 'நான்' என்ற அகங்காரமும், 'எனது' என்ற உடைமைப் பற்றும் உள்ளவரை நிராலம்ப நிலை சாத்தியமன்று. அந்த அகப்பற்றை முழுமையாக அழிப்பவனே இறைவன்.

*தாயுமானவர் பாடல்கள்:*

*தாயுமானவர் முற்றுமுழுதாக அத்வைத நிலை மற்றும் மௌன நிலையை (நிராலம்ப நிலையை)ப் பாடியவர். மனம் எந்தப் பற்றும் வைக்காமல் 'சும்மா இருக்கும்' சுகத்தை அவர் தனது பல பாடல்களில் வடிக்கிறார்.*

*பற்றின்றி நிற்றல்: "பற்றது அற்றுப் பரவெளியில் கலந்திட..." என்று பாடும் அவர், மனம் உலகப் பொருட்களின் மீது பற்றுக்கொள்ளாமல், எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்ட அந்தப் பரவெளியில் (Supportless space) எப்படி ஐக்கியமாக வேண்டும் என்பதைப் பேசுகிறார்.*

*மௌன நிலையும் பற்றின்மையும்: சத்குருவின் வழிகாட்டுதலில் மனம் எந்தவிதமான சிந்தனைப் பற்றுக்கோடும் இல்லாமல், வாக்கும் மனமும் அடங்கிய மௌன நிலையில் நிற்பதே உண்மையான பேரின்பம் என்கிறார். இது ரமண மகரிஷி குறிப்பிடும் 'சும்மா இருத்தல்' என்ற நிராலம்ப நிலையின் நேரடி எதிரொலியாகும்.*

*அருணகிரிநாதர் (திருப்புகழ் / கந்தரனுபூதி):*

*அருணகிரிநாதர் தனது கந்தரனுபூதியில், உலகியல் மாயையிலிருந்து விடுபட்டு, பற்றற்ற நிலையை (நிராலம்பத்தை) அடைந்த தீவிர ஆன்மீக அனுபவத்தை வெளிப்படுத்துகிறார்.*

*மாயைப் பற்றை அறுத்தல்: "மாயப் பிறவித் தொடரும் அறுத்து..." — மனிதனைப் பிணைத்து வைத்திருக்கும் மாயை மற்றும் கர்ம வினைகளின் பிடியிலிருந்து விடுபடுவதே பற்றற்ற நிலையாகும்.*

*மனம் ஒடுங்கும் நிலை: "சும்மா இரு சொல்ல அற என்றலுமே அம்மா பொருள் ஒன்றும் அறிந்திலனே" — தாயுமானவரைப் போலவே அருணகிரிநாதரும் 'சும்மா*

*இரு' என்ற உபதேச ரகசியத்தை வியந்து பேசுகிறார். மனம் எவ்வித எண்ண அலைகளிலும் சிக்காமல், எந்தப் பற்றுக்கோடும் இன்றித் தன்னிச்சையாக அமைதியாக நிற்கும் அந்தத் துரிய நிலையே முருகனின் அருளால் தனக்குக் கிட்டியதாக அவர் குறிப்பிடுகிறார்.*

*7. ரமணரின் வாழ்வும் அனுபவமும்:*

*மகரிஷியின் வாழ்க்கை முழுவதும், குறிப்பாக அவர் குகைகளில் வாழ்ந்த காலங்களில், அவர் எவ்விதமான புற ஆதாரங்களையும் தேடவில்லை. இதுவே நிராலம்ப நிலையின் நடைமுறை வடிவமாகும்.*

*எண்ணங்களற்ற மௌனம்: "தியானம், ஒருமுகப்படுத்துதல் ஆகியவற்றில் ஈடுபடும்போது, மனம் எந்த எண்ணத்தையும் பற்றிக்கொள்ளாமல், எதையும் நினைக்காமல், வெறும் 'இருப்பு' நிலையில் இருப்பதுதான் உண்மையான நிலை" என்றும், "எண்ணங்கள் அற்ற, ஆனால் விழிப்புணர்வுடன் இருக்கும் அந்த நிலையே பரிபூரணமான நிலை " என்றும் அவர் குறிப்பிடுகிறார்.*

*அகங்காரமற்ற நிலை: தனது 16வது வயதில் அவர் அடைந்த மரண அனுபவம் நிராலம்பத்தின் உச்சமாகும். அங்கு உடல் அழிந்தாலும் தான் அழியவில்லை என்பதை உணர்ந்தார். அப்போது அந்த 'நான்' என்ற அகங்காரம் எந்த ஆதாரமும் இன்றி, தன் மூலத்தை உணர்ந்து ஒன்றிப்போனது.*

*மகரிஷியின் பொன்மொழி: "நினைவுகள் நீங்கி, மனம் இருதயத்தில் லயித்திருக்கும் நிலையே சித் (தூய அறிவு). எண்ணங்கள் அற்ற அந்த நிலையே சுய அனுபூதி. இதற்கு எந்த மந்திரமோ, எந்த உருவமோ, எந்த வெளி ஆதாரமோ தேவையில்லை. 'நான்' என்ற எண்ணம் எழாத அந்த அமைதியே நிராலம்பமான, ஆதாரமற்ற அந்த ஞான நிலை".*

*8. சாதகருக்கு நிராலம்பம் ஏன் முக்கியம்?*

தூய விழிப்புணர்வு: எண்ணங்கள் இருக்கும்போது மனம் ஏதோ ஒன்றின் மீது சாய்ந்து (ஆதரவு தேடி) நிற்கிறது. எண்ணங்கள் முழுமையாக மறையும்போது, மனம் தனது உண்மைத் தன்மையான 'சுயவிழிப்புணர்வில்' நிலைபெறுகிறது. இதுவே உண்மையான 'நிராலம்ப' நிலை.

செயற்கை நீக்கம்: "நான் தியானிக்கிறேன்", "நான் ஆன்மாவில் இருக்கிறேன்" என்ற எண்ணமே ஒருவகை 'ஆலம்பனம்' (பற்றுக்கோடு) தான். அதுவும் மறையும்போதுதான், முயற்சியற்ற இயல்பான நிலை உண்டாகிறது.

*அன்றாட வாழ்வில் பற்றற்று (நிராலம்பத்தை) பயிலுதல்:*

பகவான் ஸ்ரீ ரமண மகரிஷிகளின் வழிகாட்டுதலின்படி தொகுக்கப்பட்ட 'மஹாயோகம்' நூலின் அடிப்படையில், அன்றாட வாழ்வில் நிராலம்ப நிலையைப் பயில்வதற்கான எளிய மற்றும் நேரடியான வழிமுறைகள் பின்வருமாறு:

இருதயத்தில் மனதை நிலைநிறுத்துதல்: தியானம் செய்யும்போது மூச்சின் இயக்கத்தைக் கவனித்து, நெஞ்சின் மையத்திற்கு வலதுபுறம் உள்ள 'இருதயத்தை' தியானத்தின் இருப்பிடமாகக் கொள்ள வேண்டும். மனம் வெளிநோக்கிச் செல்லாமல் இருதயத்தில் நிலைபெறப் பழக வேண்டும்.

'நான் யார்?' என்ற தொடர் விசாரணை: அன்றாட வாழ்வில் எந்த எண்ணம் எழுந்தாலும், "இந்த எண்ணம் யாருக்கு வருகிறது?" என்று கேட்டு, அதன் மூலமான 'நான்' எழும்மிடத்தை நோக்கி மனதை உள்ளே திருப்ப வேண்டும். எண்ணங்களை அவற்றின் மூலத்திலேயே கிள்ளியெறிவது அவசியம்.

வெளிக் கும்பகப் பயிற்சி: தேவைப்படும்போது, மூச்சை வெளியேற்றிய பின் அப்படியே நிறுத்தி (வெளிக் கும்பகம்), மனதை இருதயத்தில் வைத்து "நான் யார்?" என்ற விசாரணையுடன் அமைதியாக இருப்பது மனதை ஒருமுகப்படுத்த உதவும்.

எண்ணங்களைத் தடுத்தல் மற்றும் கவனித்தல்: மனம் உலகியல் விஷயங்களை நோக்கி ஓடும்போதெல்லாம், அவற்றுடன் போராடாமல், "இது யாருக்குத் தெரிகிறது?" என்று ஆன்மாவின் மீதே கவனத்தைத் திருப்ப வேண்டும். வாசனைகளைப் (பழைய பதிவுகளை) எரிக்க இதுவே எளிய வழியாகும்.

குருவின் மீதான பக்தி மற்றும் சரணாகதி: எந்தச் செயலையும் செய்யும்போது அதன் பலனை இறைவனுக்கும் குருவுக்கும் அர்ப்பணித்துவிட்டு, "எல்லாமே அவன் செயல்" என்ற மனநிலையை வளர்த்துக்கொள்வது அகங்காரத்தைக் கரைத்து நிராலம்ப நிலைக்கு அழைத்துச் செல்லும்.

முடிவுரை:

நிராலம்பம் என்பது தியானிப்பவன், தியானிக்கப் படும் பொருள், தியானம் என்ற முப்புரித் தளைகளையும் கடந்து, மனம் தனது சுயமாகவே நிலைபெறும் உன்னத நிலை. ஒரு சிறு பறவை ஆகாயத்தில் எவ்விதத் தடையுமின்றிச் சுதந்திரமாகப் பறப்பது போல, மனம் எந்தவிதமான 'நான்' என்னும் அகங்காரப் பற்றுக்கோடும் இன்றி, முழு விடுதலையுடன் தனது சுயத்தில் லயித்திருப்பதே நிராலம்பம்.

இங்கு சாதகன் (அறிபவன்), சாதனை (பயிற்சி), சாத்தியம் (அடையப்படும் இலக்கு) என்ற மூன்றின் பிரிவும் அடிபட்டுப்போய், எல்லாம் ஒன்றாகக் கலந்த ஆதாரமற்ற பரவெளி மட்டுமே எஞ்சி நிற்கும். பகவான் ரமணர் தம் வாழ்வால் வாழ்ந்து காட்டிய "எதையும்

பற்றாத, ஆனால் அனைத்தையும் உள்ளடக்கிய” இந்த அத்வைத நிலையே, பிறப்பற்ற பெருவெளியின் வாசலை நமக்குத் திறந்து காட்டுகிறது.

ஆயினும், ஆழம் அறியாத் தண்ணீரில் தத்தளிப்பவன் தன் உயிரைக் காக்க ஏதேனும் ஒரு துணையைப் பற்றிக்கொள்வது போல், இந்த உலகியல் சம்சார சாகரத்தில் மூழ்கித் தவிக்கும் நம்மால் திடீரெனப் பற்றற்ற அந்தத் துரிய நிலையை எட்ட முடியாது. எனவேதான், அத்தகைய பற்றற்ற பெருவெளியை எளிதில் அடைய, நம் கைகளில் கிடைத்த அருட்கோடாகிய “பற்றற்றான் பற்றினைப் பற்றி”, நம்மை கரையேற்றும் ரமண குருவின் திருவடிகளை இறுதியாய்ப் பற்றி, அவன் அருளால் அந்தப் பரவசமான நிராலம்ப நிலையை நாம் யாவரும் அடைந்து பேரின்பம் பெறுவோமாக!

**“அதெந்துவே என்றருளாயே!”**

*தாய்ப்பசுவை நாடி ஓடும் கன்றென உன் திருவடி சரணடைந்தோரின் வினைகளை, ஞானப் பார்வையாலேயே பொசுக்கும் அருணை மாதவனே! ஆதரவற்ற எளியேன் உன்னை அழைத்தால், தாயன்போடு “என்னப்பா?” (அதெந்துவே) என்றொரு சொல் கேட்டு அருளலாகாதா?*

*கறவையே நாடிக் கடுகியே யோடும்*
*கன்றுபோற் கழலடை வோரை*
*விறலினா லோங்கும் விழியினால் வினையின்*
*வீறுதீர்த் தருள்செய்வேங் கடனே*
*தறியதா மருணைத் தலத்திலே தேமாந்*
*தண்ணிழ லமர்ந்தமா தவனே*
*அறவைநா யடியே னாதரித் தழைத்தால்*
*அதெந்துவே யென்றரு ளாயே.*

*— அதெந்துப் பத்து, 6, சந்நிதி முறை, ஸ்ரீ முருகனார்*

# பகவானின் அணுக்கத் தொண்டர் டி. ஆர். கனகம்மாளின் அருந்தவ வாழ்வு

**தமிழில்: மா. முருகேசன்**

*ஏப்ரல் 1950ல் பகவானின் மகாநிர்வாணத்திற்குப் பின் கனகம்மாளும் அவரோடு இருந்த மற்றும் எங்கும் இருந்த பகவானின் பக்தர்கள் வாழ்வின் ஒளி மறைந்து போனது போன்றும் அந்த இழப்பிலிருந்து மீண்டு வர இயலாது என உணரத் தொடங்கினர். சிதறுண்ட பக்தர்கள் திருவண்ணாமலையை விட்டு வெளியேறினர்; ஆனால், சில காலத்திலேயே அமைதியை அவர்கள் வேறெங்கும் பெற இயலாது என்பதைக் கண்டுகொண்டனர்; எனவே, அவர்கள் சிறிது சிறிதாக ஸ்ரீ ரமணாஸ்ரம, பகவான் சந்நிதிக்கு வந்தடைந்தனர். (Paramount Ramana, The Mountain Path, Jan. 1986, p.26)*

*அதிர்ஷ்டவசமாக, தன்னுடைய அடியார்களிடம் எச்சரிவிலிருந்தும் மீண்டுவிடும் தன்மையினை உயிர்ப்பித்தெழச் செய்திருந்தார்; ஸ்ரீ பகவான்; அவருடைய உபதேசங்களின் தாக்கத்தின்படி, அவர்கள் விரைவில் பிரிவுத்துயரில் தோன்றிய உணர்வினையும் கடந்து செல்ல முடிந்தது. அவர் விடைபெறும் முன் இறுதியாகக் கூறிய சொற்களின் பொருளை அப்பொழுது முழுதும் அறிந்து கொள்ளவில்லை என்றாலும் இப்பொழுது பகவான் அவர்களை விட்டு அகலவில்லை என்பதை நன்குணர்ந்தனர். அவர்களுடைய செயல்பாடு புதிய பரிமாணத்தை அடையவும், அவரது உபதேசத்தின் ஆழ்ந்த உட்பொருளை மெய்ப்பட*

உணரவும் அவர் அழைப்பதைக் கண்டனர். அவர் மீது பக்தியோடு இருப்பது மட்டுமல்லாது அவர் வழியை பின்பற்ற வேண்டும் என்பதைக் கண்டனர். அவரது உபதேசங்களை வாழ்வியலாய் அவற்றின் ஓர் அங்கமாய் வாழ வேண்டிய தருணம் வந்துவிட்டதைக் கண்டனர். அவர் எழுதியுள்ளபடியும் சொல்லி அருளியபடியும் நிற்பதில் கவனம் செலுத்துவதே அதன் முதல் படியாகும். இதை கனகம்மாள் இவ்வாறு கூறுகின்றார்.

*“பகவான் உடலை விட்டு நீங்கியபொழுது, நாம் தாங்கொணா துயரத்தில் இருந்தோம்; அதற்கு முன் நாம் வாழ்ந்தபடி நம்மால் வாழ முடியவில்லை. ஓரளவு மன அமைதியை அடைவதற்கு பகவானின் ஸ்ரீ ரமண நூல் திரட்டு நூலில் உள்ளவற்றை விளக்கி அருளுமாறு வேண்டிக் கொண்டோம்; அதாவது, பகவானின் பாடல்களையும் அவர் தமிழில் மொழிபெயர்த்தளித்த அருமறைகளையும் விளக்குமாறு கேட்டுக்கொண்டோம்.*

*அதன்படி, முருகனார் நூல்திரட்டின் உட்பொருளை விளக்கிக் கூறலானார். இந்த சொற்பொழிவுகள் ஆறு மாதம் தொடர்ந்து நிகழ்ந்தன. முருகனார் மிகவும் தனித்துவமான ஆசிரியர். அவரது சொற்பொழிவுகள் தெள்ளத் தெளிவாயும், எடுத்துக்காட்டு விளக்கங்கள் கூடியதாயும் மற்ற தத்துவ நூல்களிலிருந்து மேற்கோள்கள் நிறைந்ததாயும், அவற்றின் நிகழ்வுகளை சுட்டுவதாயும் மிளிர்ந்தன. சில சமயம், ஒரு பாடலின் பொருள் விளக்கம் இரண்டு, மூன்று நாட்கள் கூட நீளும். சிக்கலான பாட்டின் உண்மைப் பொருளையும் பகவான் உபதேசத்தின் உட்பொருளையும் எங்களை உணரச் செய்வதில் முருகனார் வெற்றி கண்டார். அவரது விளக்கங்கள், அவ்வப்போது பகவானின் நினைவலைகளாய் மிளிர்ந்தன. ரமணாமிர்த அருள்மழையாய் எங்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தின” (Cherished Memories p.83; ‘Paramount Ramana, The Mountain Path, Jan 1986, p.27)*

பகவானை இழந்த கனகம்மாளின் சோகம், பகவானின் தலையாய சீடரான முருகனாரின்

வழிகாட்டுதலின்படி பகவானின் உபதேச உள்ளார்ந்த பொருளை அறிந்து உணர்தலின் வழியாய் மெல்லமெல்ல குறையத் தொடங்கியது. நல் அதிர்ஷ்டம் இல்லையாயினும் பகவானின் உபதேசத்தின் உட்பொருளை அனுபவமாதலால் பகவானோடு மிக நெருக்கமாய் உணர்ந்ததால் நல்லாசி பெற்றவராகவே உணர்ந்தார் கனகம்மாள். தமிழை நன்கு கற்றுணர்ந்தோருக்கும் கூட பகவானின் பாடல்கள் புரிந்துகொள்வதற்கு கடினமாய் இருக்கின்றன. ஏனென்றால், தமிழ்மொழி ஆழ்ந்த நுட்பமானதாய் அறிய கருத்துக்களை கொண்டு இலங்குகின்றது; மேலும், அது ஒரே சமயத்தில் பன்முகத்தன்மையுடன் விளங்குகின்றது; ஒரு சொல் பல உணர்வுகளையும், பல பொருள் நிறைந்ததாயும் இலங்குகின்றது. தன் குருநாதரின் மீது கொண்டிருந்த அளவிலா பக்தியினால் மட்டுமின்றி, அவர் பகவானை உள்வாங்கி உள்ளபடி கொண்டனவற்றை, தன்னிடமிருந்த அளப்பரிய ஆற்றலால் பாடல்களாக்கி தொகுத்து பகவானின் சீடனாய் முருகனார் அரும்பங்காற்றினார். பகவானோடு இருந்த காலத்தில், பகவான் மற்றும் அவரது உபதேசங்கள் பற்றி 30,000 பாடல்கள் பாடியருளினார்; அவற்றில் பல படித்து, திருத்தி, சிலவற்றை பகவானே மீண்டும் எழுதியுள்ளார்.

> “ஒரு சமயம், பகவானின் நூல் திரட்டினை விளக்கம் அளித்துக் கொண்டிருந்தபொழுது முருகனார் சில சிறப்பு வகுப்புகளை எனக்காக நடத்தினார். அவ்வாறு விளக்கம் அளித்த நூல்களில் ஒன்று ஒழிவில் ஒடுக்கம். பகவானுக்கு மிகப்பிடித்தமான நூல்களில் இதுவும் ஒன்று என்று முருகனார் கூறுவது வழக்கம். இந்நூலுக்கு இப்பொழுது கிடைக்கின்ற விளக்கவுரை சித்தாந்தத்தை அடிப்படையாய்க் கொண்டது; அதற்கு வேதாந்தத்தை அடிப்படையாய்க் கொண்டு தான் (முருகனார்) ஒரு விளக்கவுரை எழுத வேண்டுமென பகவான் கேட்டுக்கொண்டார் என்றும் முருகனார் என்னிடம்

*கூறினார். இப்பணியினை முருகனாரால் செய்ய இயலவில்லை. நூல் திரட்டு விளக்கத்தின்பொழுது முருகனார் ஒழிவில் ஒடுக்கம் நூலிலிருந்து அடிக்கடி மேற்கோள் காட்டி விளக்குவார். ஒழிவில் ஒடுக்கம் பாடல்கள் மிக இனிமையாயும், நெஞ்சை நெக்குருகச் செய்வதாயும் உள்ளன. இந்நூலிலிருந்து முருகனார் விளக்கும் பாடல்கள் என் உள்ளத்தை கொள்ளைகொண்டு அந்நூல் முழுவதையும் கற்க வேண்டுமென்கின்ற வேணவாவினை என்னுள் தோற்றுவித்தது. ஆனால், அது என்னால் உட்கிரகித்துக் கொள்ள முடியாத சிக்கலான கருத்துக்கள் அடங்கிய நூல். சொற்களை இணைத்து சிக்கலான சொற்றொடர்களை அமைப்பதற்கு தமிழ்மொழி இடம் அளிக்கின்றது. இவ்வித சொற்றொடர்களை சீர்களாக பிரிக்க (அலகிடுதல்) ஒருவர் கற்றிருந்தால் ஒழிய அவற்றிலிருந்து எதையும் அறிந்துகொள்ள இயலாது. இந்நூலை கற்றுணர்ந்து கொள்ள இயலாது. இந்நூலை கற்றுணர்ந்து கொள்ள ஒரு அனுபவமிக்க ஆசிரியரின் வழிகாட்டுதல் அவசியம். எனக்கு ஆசானாய் வழிகாட்ட முருகனார் கருணையுடன் ஒத்துக்கொண்டார்.*

*கற்போர் உள்ளத்தில் கற்பிப்பவை ஆழப்பதியுமாறு தாக்கம் உடையதாய் இருந்தது மட்டுமன்றி கற்பிக்கும் முறை புரட்சிகரமானதுமாய் இருந்தது, முருகனாரின் பாடம் கற்பிக்கும் முறை. ஒவ்வொரு பாடலையும் என்னை சப்தமாக படிக்குமாறு வலியுறுத்தினார் முருகனார். தமிழ்மொழியின் நுட்பங்களை நான் நன்கு அறிந்திருக்கவில்லையாதலால் நான் பாடல்களை படித்த முறை தெளிவற்றும் குழப்பம் உடையதாயும் இருந்தது. ஆனால், என் ஆசிரியர் மிகப் பொறுமையுடன் கற்பித்தார். தட்டுத்தடுமாறி நான் பாடலை படித்தவுடன் அவர் அதே பாடலை உரிய முறையில் சீர்பிரித்து, இடைவெளி விட வேண்டிய இடத்தில் இடைவெளிவிட்டும் வாசித்தார். அவ்வாறு முருகனார் பாடலை வாசித்தபொழுது என்னால் கூட அப்பாடலின் பொதுவானப் பொருளை அறிந்துகொள்ள முடிந்தது. ஒவ்வொரு பாடலையும்*

*நான்கு அல்லது ஐந்து முறை அவர் வாசித்தார். அவ்வாறு முருகனார் பாடலை வாசிக்கின்ற பொழுதே நான் அப்பாடலை மனனம் செய்துவிடுவேன். அடுத்து, அவர் அப்பாடலின் பொருளை எனக்கு விளக்கி அருளினார். திருமந்திரம், திருவாசகம், திருக்குறள் மற்றும் நாலடியார் போன்ற திருமறைகளிலிருந்து அவர் மிக அதிகமாய் மேற்கோள் காட்டினார். அவ்வப்போது, அவர் அளிக்கின்ற அளவற்ற செய்திகள் என் மனதில் மீண்டும் மீண்டும் ரீங்காரமிட்டு என்னை பயத்தில் திகைப்புறச் செய்துவிடும். (Cherished Memories, p.85)*

இதுபோன்ற மகோன்னதமான படிப்பினை முருகனார் போன்ற உத்தம ஆத்மாவிடம் கற்பதற்கு தகுதியுள்ளவள்தானா? என்று கனகம்மாள் தனக்குத் தானே கேள்வி எழுப்பிக் கொண்டார்; ஆனால் புலவராகிய முருகனார் படிப்பினைத் தொடருமாறு வலியுறுத்தி வந்தார்.

*“இதுபோன்ற நூல்களை கற்பதில் எனக்குள்ள இடர்பாட்டினை கவனிக்க தவறவில்லை. இம் மாபெரும் ஞான உத்தமரும் பாண்டித்தியம் பெற்றவருமான முருகனார் கருணைமிகு உள்ளத்தினராய் எந்நிலைக்கு இறங்கிவந்து தமிழ்மொழி அடிப்படைக் கூறுகளை ஐயந்திரிபற கற்றுத் தந்தார்; அதனால், பாடல்களை நான் நன்குணர்ந்து படித்து சுவைக்கலாம் அல்லவா!” தமிழ்ப் பாடல் வரிகளில் சொற்கள் அமையும் அடிப்படை விதிகளை எனக்குத் தெளிவாய் விளக்கிக் கூறியது மட்டுமின்றி பாடல்களை எவ்வாறு படிக்க வேண்டுமோ அவ்வாறே பாடல்களை வாசிக்க எனக்கு பயிற்சியும் அளித்தார். ஒரு நாள் வகுப்பு முடிந்த பின் அவரிடம் நான் கூறினேன், “ஸ்வாமி, நான் தமிழ்மொழியை நன்கு அறிந்திருக்கவில்லை என்ற உண்மையை வருத்தத்துடன் கூறுகின்றேன். தமிழ்மொழியை நான் நன்கு அறிந்திருந்தால் இப்பாடல்களை எவ்வித இடர்பாடும் இல்லாமல் முற்றிலும் மனனம் செய்திருப்பேன். உங்களைப் போன்ற உத்தம ஞானிகளுக்கு மாணவியாய் இருப்பதற்கு நான் தகுதியானவள்*

*இல்லை. நான் உண்மையில் மிக வருந்துகின்றேன். முருகனார் பதிலுரைத்தார், "உங்கள் மனதில் இந்த பாடங்கள் பதியவில்லை என்றால் பரவாயில்லை; இந்த பாடங்களால் உங்கள் நெஞ்சம் நெகிழ்ந்து நெக்குருகுகின்றதென்றால் அதுவே போதுமானது" இந்த சொற்களை என் ஆசிரியர் கூறுகின்றபொழுது அவர் கண்கள் பனித்தன; உணர்ச்சிப் பெருக்கால் குரல் குழறியது. ஆன்மீகப் பாடல்களை பாராயணம் செய்யும்பொழுது இதே போன்ற உள்ளம் கறைந்துருகும் உணர்வினை அனுபவித்துள்ளார்; அவருடைய போன்ற அளவிலா கருணையினால் அவரது உள்ளம் நெகிழ்ந்துருகி உணர்ச்சிப் பெருக்கில் கசிந்துருகுவது போல் நானும் அது அளவிலா ஆத்ம ஆனந்தத்தில் திளைக்க வேண்டுமென உளமாற ஆசி அருளினார்." (மேலது. பக்கம். 85)*

பகவானின் பாடல்களை ஆழ்ந்து உட்பொருளை நாடி விளக்குகின்ற பொழுது மண்டபத்தில் தொடக்கக் காலத்தில் முருகனார் கண்ணுற்ற நிகழ்வுகளும் இடையிடையே எடுத்தியம்பப்படும். புலவர் அவரது ஆன்மீக அனுபவத்தையும் பகவானைப் பற்றி எழுதும்பொழுது அவ்வனுபவம் எவ்வாறு இருந்தது என்பது பற்றியும் அவர் வெளிப்படுத்தினார். பகவான் திருவண்ணாமலை வந்தடைந்தபொழுது அருணாசலேஸ்வரர் அவரை நடத்திய தன்மைப் பற்றி குறை கூறி அருணாசலேஸ்வரர் மீது பாட்டொன்று எழுதியது பற்றி ஒரு வகுப்பில் முருகனார் விளக்கினார்.

இந்த பாடல்கள் அச்சில் வெளிவரவே இல்லை; முருகனாரின் நண்பர் ஒருவர் முருகனாரின் பாடல்களை அச்சில் பதிப்பித்து வெளியிடுவதற்காக சென்னைக்கு ஒரு பெட்டியில் வைத்து கொண்டு சென்றபொழுது அந்த நண்பர் விழுப்புரத்தில் ரயில் மாறி வேறொரு ரயிலில் ஏறும்பொழுது பாடல்கள் அடங்கிய பெட்டியும் அவரது மற்ற உடைமைகளும் காணாமல் போயிருப்பதைக் கண்டார். முருகனார்

*போன்ற கவிபாடும் சான்றோர்களுக்கு அந்த பாடல்களை ஞாபகத்திலிருந்து மீண்டும் எழுதுவது எளிதாய் இருந்திருக்கும். ஆனால், பாடலில் கூறப்பட்டுள்ள சரணாகதியின்படி, பகவான் இந்த பாடல்கள் வெளியிடப்படுவதை விரும்பவில்லை என முருகனார் நினைத்தார்; அப்படி இல்லையென்றால், சென்னை செல்லும் ரயில் பயணத்தில் இவை காணாமல் போயிருக்காது என இந்நிகழ்வை முருகனார் எடுத்துக்கொண்டார். (அபர்ணா கிருஷ்ணமூர்த்தியுடன் 2022 ஏப்ரல் திங்களில் நடந்த உரையாடல்களிலிருந்து எடுக்கப்பட்டது).*

கனகம்மாளின் உற்ற தோழியும் வழி நடத்துபவருமான ஆனந்தம்மாள் கனகம்மாளோடு முருகனாரின் பயிற்சி வகுப்புகளில் கலந்து கொண்டமையால் முருகனாரின் வகுப்புகளில் பயில தனது தகுதி பற்றிய கனகம்மாளின் பதற்றம் விலகியது. ஆனந்தம்மாள் வயதில் மூத்தவர் மற்றும் ஆன்மீக அனுபவம் அதிகம் பெற்றவராயினும் அவருக்கு எழுதப் படிக்கத் தெரியாது. இருப்பினும், பகவான் மீது கொண்டுள்ள அளவிலா பக்தியினாலும் நம்பிக்கையினாலும் ஆசிரியர் கூறுகின்றவற்றை உட்கிரகித்துக் கொள்வதில் எவ்வித இடையூறும் இல்லை.

பகவான் விருபாக்ஷ குகையில் அருள்பாலித்துக் கொண்டிருந்த தொடக்கக் காலத்தில் சரணடைந்த பக்தர்களில் ஒருவர் ஆனந்தம்மாள். சின்னஞ்சிறு வயது முதலே, கனகம்மாளைப் போன்றே, ஆனந்தம்மாளிடம் ஆன்மீக உணர்வு அதிகமாய் வெளிப்பட்டது. சிறு வயதிலும் கூட, விருபாக்ஷ குகைக்கு மலை ஏறி வந்து பகவான் தரிசனத்தில் பல மணி நேரம் தொடர்ந்து தியானத்தில் ஈடுபட்டார். பிற்காலத்தில் அவரது கணவர் மரித்தபின், திருவண்ணாமலைக்கு வந்து

ரமணா நகரில் ஒரு கூரை குடிசையில் வாழ்ந்து வந்தார். அவருடைய சகோதரர் ஆனந்தம்மாளின் மகனை வளர்க்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். பொருள் சேகரிக்க வேண்டுமென்றோ வசதியோடு சௌகரியமாய் வாழ வேண்டுமென்றோ அவர் நினைத்ததில்லை. அவரது நெருங்கிய விசுவாசியுமான தோழி ஒருவர் அவரது சமையலையும் பாதுகாப்பையும் பார்த்துக்கொண்டார். ஆனந்தம்மாள் தன்னுடைய ஒவ்வொரு நொடியையும் பகவானின் உபதேசத்தை அனுபவமாக்குவதிலேயே அர்ப்பணித்தார். சிறு வயது முதல் இறுதி மூச்சு உள்ளவரை கனகம்மாள் இறை அனுபவத்தில் (ரமணானுபவம்) நிலை நிற்பதிலேயே கண்ணும் கருத்துமாய் இருந்தார். ஆனந்தம்மாளோடு தான் இறுதியாக பயிற்சி வகுப்பில் பயின்றதைப் பற்றி கனகம்மாள் இவ்வாறு எழுதுகின்றார்.

*“பகவானின் நூல் திரட்டினை கற்பித்து முடித்த பின் முருகனார் ஆத்மபுராணம் போன்ற ஆன்மீக தத்துவ நூல்களை விளக்கத் தொடங்கினார். ஒரு நாள் ஆனந்தம்மாள் முருகனாரிடம் தபோதனர் வாமதேவா பற்றி ஆத்ம புராணத்தில் வருகின்ற ஒரு பாடலை விளக்கம் கூறுமாறு வேண்டினார். தபோதனர் வாமதேவாவைப் பற்றி ஆனந்தம்மாள் கூறும்போது, வாமதேவா, ஒருவேளை, அவரது பிராரப்த கர்மாவின் படி, கர்ப்ப வாசம் (கர்ப்பத்தில் இருத்தல்) செய்யுமாறு விதிக்கப்பட்டிருக்கலாம்; அதனால் தான், அவர் கர்ப்பத்திலிருந்து வெளியில் வந்த உடனேயே “தன்னை உணர்ந்தார்” அல்லவா? இந்த வார்த்தைகளை கூறியவுடன், அவர் திடீரென்று முன்னால் விழுந்து வணங்குவது போல் சரிந்தார்; அது அவர் சாஸ்டாங்கமாக நமஸ்கரிப்பது போன்றிருந்தது. ஆனால், சில நிமிடங்கள் கழித்தும், அவர் தனது “சாஸ்டாங்க நமஸ்கரித்தலிலிருந்து எழுந்திருக்காமல் இருக்கவே நான் அவரை தூக்கி அமர வைத்தேன். அவருக்கு சுய உணர்வு இல்லை; நாங்கள் அவர் முகத்தில் தண்ணீர் தெளித்த பின்பும் அவரது*

*நிலையில் எவ்வித முன்னேற்றமும் இல்லை. பிறகு, அவரை நகரத்திலிருந்து அவரது உறவினர் வீட்டிற்கு கொண்டு சென்றோம். மீண்டும் அவர் கண்களைத் திறக்கவே இல்லை. இது மாலை 6.00 மணிக்கு நிகழ்ந்தது; மாலை 9.00 மணிக்கு அவர் இறந்து விட்டதாக அறிவிக்கப்பட்டது. அவரது கடைசி நினைவு தபோதனர் வாமதேவாவின் பிறப்பு விடுதலையாய் இருந்தது. அவருடைய மகன் மற்றும் சகோதரர் ஆகியோரால் அவரது உடல், ஆஸ்ரமத்தின் அருகே நல்லடக்கம் செய்யப்பட்டது. ('Paramount Ramana' 'The Mountain Path, Jan. 1986, p.27)*

*(தொடரும்)*

# இனிவரும் திருநாட்கள் 2026

| பூஜை/விழா/பண்டிகை | ஆங்கில தேதி | |
|---|---|---|
| நவராத்திரி விழா துவக்கம் | 11/10/2026 | ஞாயிறு |
| சரஸ்வதி பூஜை | 20/10/2026 | செவ்வாய் |
| விஜயதசமி | 21/10/2026 | புதன் |
| தீபாவளி | 08/11/2026 | ஞாயிறு |
| கார்த்திகை உற்சவம் துவக்கம் | 15/11/2026 | ஞாயிறு |
| மகா தீபம் | 24/11/2026 | செவ்வாய் |
| பகவான் 147 ஆவது ஜயந்தி | 25/12/2026 | வெள்ளி |



# தினசரி வாழ்வில் அருள்

## வேங்கட் S. ரமணன்

*[ஸ்ரீ ரமணாஸ்ரம ஆங்கில காலாண்டு இதழான 'தி மவுண்டன் பாத்' (The Mountain Path), ஜூலை 2026 இதழ் தலையங்கத்தின் மொழிபெயர்ப்பு.]*

அருள் என்பது நமது அன்றாட வாழ்வில் இயல்பாக வெளிப்பட வேண்டிய ஒன்று. நாம் தினமும் ஆற்றும் கடமைகள், மேற்கொள்ளும் ஆன்மிக சாதனை, தொழில் மற்றும் ஓய்வு நேரத்தைச் செலவிடும் விதம்— இவற்றின் ஒட்டுமொத்த வெளிப்பாடே நாம்.

பகவானின் பக்தரான நண்பர் ஒருவர் சமீபத்தில் என்னிடம் மனம் திறந்து பேசினார். அறநெறி தவறாது வாழ்ந்த தன் தந்தை, இறுதிக்காலத்தில் மிகுந்த வலியோடும் வேதனையோடும் மரணமடைந்ததைக் குறித்து ஆற்றாமையோடு கேட்டார்: "இன்பங்களைத் துறந்து, தர்ம வழியில் வாழ்ந்து என்ன பயன்? மாறாக, மதுவிலும் களியாட்டங்களிலும் மூழ்கி, வரம்பின்றி வாழ்பவர்கள் பலரும் எவ்விதப் பெரிய வேதனையுமின்றி எளிதாகக் காலமடைந்துவிடுகிறார்களே!"

பகவானின் பாதையில் பத்தாண்டுகளாகப் பயணிக்கும் ஒருவரிடமிருந்தே இத்தகைய வினா எழுந்தது எனக்கு வியப்பளித்தது. அருளைப் பற்றிய அடிப்படைப் புரிதல் சில நேரங்களில் தவறிவிடுகிறது என்பதையே இது காட்டியது.

அவரது தந்தையின் இறுதித் தருணங்களைப் பற்றி மேலும் கேட்டறிந்தேன். தொடக்கத்தில் அதைத் துயரமாக மட்டுமே சித்தரித்தவர், பேசப்பேச அது தனது சொந்தக் கண்ணோட்டமே என்பதை ஒப்புக்கொண்டார். உண்மையில், அவரது தந்தை உள்ளூர முழு

விழிப்புணர்வோடும் அமைதியோடும் இருந்தார்; அன்பானவர்களிடம் விடைபெற்றார்; பிழைக்க வாய்ப்பில்லை என்ற நிலையில் வீண் மருத்துவ சிகிச்சைகளைத் துணிவுடன் நிறுத்தச் சொன்னார்; இறைவனின் திருநாமத்தை நாவில் ஏந்தியவாறே அமைதியாக உயிர்நீத்தார்.

அருள் என்பது உடலின் புற வலிகளை நீக்குவதல்ல; மாறாகத் தெளிவு, ஏற்பு மனப்பான்மை, உள் அமைதி, விவேகத்துடன் செயல்படும் வலிமை மற்றும் பிறருக்குச் சுமையாகாமல் விடைபெறும் மாண்பை அளிப்பதே ஆகும். வாழ்வின் இறுதியில் கைகூடும் இத்தகைய மனநிலை, பகவானின் அருளொளியில் வாழ்ந்த வாழ்க்கையின் நற்பயனாகும். இறுதிக் காலத்தில் ஏதேனும் ஒரு தெய்வீகத் தலையீட்டை எதிர்பார்ப்பதை விட, இப்போதே அவரது உபதேசங்களின்படி வாழ்வதே இத்தகைய நிறைவை அளிக்கும்.

*பகவானின் அருள் எவ்வாறு வெளிப்படுகிறது?*

அந்தத் தந்தையின் மரணத்தின்போது நிகழ்ந்தது ஏதோ திடீர் வரமல்ல; அவர் ஒவ்வொரு நாளும் வாழ்ந்த தர்ம வாழ்வின் அறுவடை.

பகவானின் அருள் நமது அன்றாட வாழ்விலேயே மலர்கிறது. வாழ்வின் ஏற்ற இறக்கங்களைச் சமநிலையோடு கடப்பதிலும், நேரிடும் சூழல்களை அமைதியாகவும் மாண்போடும் எதிர்கொள்வதிலும் அதைக் காணலாம். சுயசார்புடன் வாழ்வது, தேவைகளைக் குறைத்துக் கொள்வது, பேராசையைத் தவிர்ப்பது, புறம்பேசுதலை விலக்குவது ஆகியவற்றில் அருள் துலங்குகிறது.

ஆத்மாவை நோக்கித் திரும்புவதற்குப் பகவான் அளித்த நல்வாய்ப்பிற்காக உள்ளூரத் திருப்தியும் நன்றியுணர்வும் கொள்வதே அருள். பந்த

பாசங்களையும் உலகப் பொருட்களையும் மெல்லத் தளர்த்தியபடி, பகவானில் நிலைத்து நின்று பக்தி செலுத்துவதும் அருளின் வடிவமே. பலனைப் பற்றிக் கவலைப்படாமல் கடமையை விழிப்புணர்வுடன் ஆற்றுவதிலும், கிடைக்கும் ஓய்வு நேரங்களை ஜபம், தியானம் மற்றும் ஆத்மவிசாரத்தால் நிரப்புவதிலும் அது வெளிப்படுகிறது.

நடைமுறையில் இது எவ்வாறு சாத்தியம்? இதற்குத் தேவையானது சீரான தினசரி ஒழுக்கம் மட்டுமே. காலையில் முன்கூட்டியே எழுந்து, நீராடி, பூஜை அறையில் வழிபாட்டை முடித்து, ஆன்மிக நூல்களைச் சில பக்கங்கள் வாசிக்கலாம். உலக விவகாரங்கள் நம் கவனத்தை ஈர்ப்பதற்கு முன், அமைதியான தியானத்தில் சில நிமிடங்கள் திளைக்கலாம். அவசியமானால் தொலைபேசியைச் சுருக்கமாகச் சோதிக்கலாம்; ஆனால் உள்ளம் நிலைகொள்ளும் வரை செய்திகள், மின்னஞ்சல்கள் அல்லது சமூக ஊடகங்களில் மூழ்கிவிடுவதைத் தவிர்க்க வேண்டும். இதனால் அன்றைய நாள் அமைதியாகவும் உறுதியாகவும் தொடங்கும்.

நாள் முழுவதும், "நான் உடலல்ல; எப்போதும் நிறைவான, களங்கமற்ற ஆத்மா" என்ற உண்மையை உள்ளூர நினைவில் கொள்ள வேண்டும். உலகச் செயல்பாடுகளின் வேகத்தில் நாம் அடித்துச் செல்லப்படாமல் இருக்க இந்த விழிப்புணர்வு உதவும்.

### அன்றாட வாழ்வில் ஆறு எதிரிகளை எதிர்கொள்ளல்

நம் மன அமைதியைக் குலைக்கும் அன்றாடச் சூழல்களுக்கு மூலக்காரணம் சாஸ்திரங்கள் கூறும் ஆறு உள் எதிரிகளே. பகவானின் போதனைகள் இவற்றிலிருந்து நம்மை விடுவிக்கும் தெளிவான வழிகாட்டலை அளிக்கின்றன:

- காமம் (கட்டுப்பாடற்ற ஆசை): இன்பம், அதிகாரம் அல்லது அங்கீகாரத்திற்கான வேட்கை மனதைப் புறமுகமாக இழுத்து அகந்தையை வளர்க்கிறது. பயணங்களின் போதோ, மருத்துவமனையில் காத்திருக்கும்போதோ எழும் கவனச்சிதறல்கள் இத்தகையதே. இத்தகைய உந்துதல்களை ஆத்மவிசாரத்தால் விழிப்புடன் கவனித்து, அமைதியின்மைக்கு இடம் கொடாமல் பக்தி இசை, ஜபம் அல்லது தியானத்தின் மூலம் மனதை நிலைநிறுத்த வேண்டும்.

- க்ரோதம் (கோபம்): ஆசைகள் தடைபடும்போது விவேகத்தை மறைக்கும் கோபம் எழுகிறது. அலுவலக வாக்குவாதங்களின் போது, குறிப்பிட்ட பொறுப்புகளோடும் அந்தஸ்தோடும் நம்மைப் பிணைத்துக் கொள்வதே அநீதி இழைக்கப்பட்டதான உணர்விற்கும் ஆத்திரத்திற்கும் காரணம். நம்மை ஓர் எல்லைக்குட்பட்ட "நான்" ஆகக் கருதாமல் சாட்சி நிலையாக உணரும்போது, பதற்றம் தணிந்து அமைதியாகவும் ஆக்கப்பூர்வமாகவும் செயலாற்ற இயலும்; நன்மதிப்பும் கூடும்.

- லோபம் (பேராசை): தேவைக்கு மீறிய தேடல். கவர்ச்சிகரமான முதலீட்டு வாய்ப்புகள் வரும்போது, போதிய நிதிப் பாதுகாப்பு இருந்தும் பேராசை எழலாம். பகவான் போதித்த மனநிறைவை நினைவுகூர்ந்து, சாத்தியமான லாபத்தை விட அபாயங்களை விவேகத்துடன் எடைபோடுவதன் மூலம் தேவையற்ற இழப்புகளைத் தவிர்க்கலாம்.

- மோகம் (மயக்கம்/பற்றுதல்): அளவு கடந்த பற்று பகுத்தறிவை மழுங்கடிக்கிறது. நமது குழந்தை பள்ளியில் தவறிழைக்கும்போது, குருட்டுப் பற்றினால் குழந்தையை நியாயப்படுத்தத் தோன்றும். ஆனால் குழந்தையும் தனிக் கர்ம வினையுடன் வந்துள்ள ஓர் ஆத்மா என்றும், நாம் வெறும் வழிகாட்டிகள் மட்டுமே என்றும் பற்றின்றி

உணர்ந்தால், உணர்ச்சிவசப்படாமல் நிதானமாகச் சூழலைக் கையாண்டு வழிகாட்ட முடியும்.

- மதம் (செருக்கு/அகந்தை): செல்வம், பதவி அல்லது திறமையால் தோன்றும் இறுமாப்பு. 'நானே குணப்படுத்துகிறேன்' என்ற மருத்துவரின் கர்வமோ, சமையலில் சிறந்தவர் பிறரை ஏளனமாகப் பார்ப்பதோ இதற்கு உதாரணம். நாம் 'செய்பவர்கள்' அல்ல, ஒரு பேரமைப்பின் கருவிகள் மட்டுமே என்ற பணிவு ஏற்படும்போது அகந்தை நீங்கி, இணக்கமான நல்ல முடிவுகள் உண்டாகும்.

- மாத்ஸர்யம் (பொறாமை/அசூயை): பிறர் வெற்றியைக் கண்டு புழுங்குதல். குடும்பத்தினரின் சாதனைகளைப் பார்க்கும்போது எழும் பொறாமையை, "வேறொருவர்" என்று யாருமில்லை என்ற அத்வைத உணர்வாலும், அவரவர் பிராரப்த கர்மாவே அதற்குக் காரணம் என்ற புரிதலாலும் வெல்லலாம். இதனால் மனமார வாழ்த்தவோ அல்லது சலனமின்றி அமைதியாக விலகவோ இயலும்.

சுருங்கக்கூறின், புறத் தொந்தரவுகளுக்கு அடிபணியாமல் மனதின் சமநிலையைக் காக்க வேண்டும். அமைதியான மனம், வேலைகள் ஓய்ந்திருக்கும் கணங்களில் இயல்பாகவே ஜபம், தியானம் அல்லது ஆத்மவிசாரத்தை நோக்கித் திரும்பும்.

இதை நடைமுறைப்படுத்துவது எளிதல்ல என்பதால் நாம் சத்குருவின் அருளையும் துணையையும் நாடுகிறோம். டாக்ஸ் வித் ஸ்ரீ ரமண மகரிஷி (*Talk 491*) நூலில், சத்குருவே இந்த உள் எதிரிகளைக் களையத் துணைபுரிவார் என்று பகவான் உறுதியளிக்கிறார்:

அன்பர்: சத்குருவின் சந்நிதியில் காமம், குரோதம் போன்றவை மறைந்துவிடும் என்பது உண்மையா?

பகவான்: ஆம், உண்மைதான். ஆத்ம சாட்சாத்காரத்திற்கு முன்பாகக் காமமும் குரோதமும் மறைந்தாக வேண்டும்.

அன்பர்: ஆனால், குருவின் சீடர்கள் அனைவரும் ஒரே பக்குவ நிலையில் இருப்பதில்லையே. சிலர் தவறவும் செய்கிறார்களே, அதற்கு யார் பொறுப்பு?

பகவான்: ஆத்ம சாட்சாத்காரத்திற்கும் தனிப்பட்ட சம்ஸ்காரங்களுக்கும் தொடர்பில்லை. குருவின் லட்சியத்திற்கு ஏற்ப வாழ்வது எப்போதும் சாத்தியமாவதில்லை.

அன்பர்: இத்தகைய உணர்ச்சிகள் சாட்சாத்காரத்தைப் பாதிக்காதா?

பகவான்: தன்னைத் தூய்மைப்படுத்திக் கொள்ளும் முயற்சி இயல்பாகவே நிகழும்.

அன்பர்: சாட்சாத்காரத்திற்கு முன் அனைத்து மாசுகளையும் அகற்றிவிடுவது அவசியமில்லையா?

பகவான்: ஞானம் அவற்றை அடியோடு தூய்மைப்படுத்திவிடும்.

பால் பிரண்டனின் கேள்விக்குப் பதிலளிக்கையில், பகவான் இவற்றைக் களையும் எளிய வழியைக் கூறுகிறார்:

"அவற்றின் மூலத்தைக் கண்டறியுங்கள்; பிறகு எளிதாகிவிடும். உணர்ச்சிகள் என்பவை யாவை? காமம், குரோதம் போன்றவை. அவை ஏன் எழுகின்றன? காணப்படும் பொருட்களின் மீதான விருப்பு வெறுப்புகளால். அப்பொருட்கள் ஏன் தோற்றமளிக்கின்றன? அறியாமையினால். எதைப் பற்றிய அறியாமை? ஆத்மாவைப் பற்றிய அறியாமை. எனவே, நீங்கள் ஆத்மாவைக் கண்டறிந்து அதில் நிலைத்திருந்தால், உணர்ச்சிகளால் எந்தத் தொல்லையும் இராது." (Talk 523)

## தினசரி ஒழுக்கத்தை உருவாக்குதல்

பணி மற்றும் குடும்பக் கடமைகளுக்கு அப்பாற்பட்ட நேரத்தை விழிப்புணர்வுடன் திட்டமிடுவதன் மூலம், எப்போதோ மேற்கொள்ளும் ஆன்மிக முகாம்களையோ அல்லது கட்டாய 'டிஜிட்டல் விலகலையோ' சார்ந்திருக்க

வேண்டியதில்லை. படிப்படியாக வளர்த்தெடுக்கப்படும் இந்த ஒழுக்கம், வாழ்வில் ஓர் அமைதியான நிறைவையும் உறுதியையும் கொண்டுவரும்.

நம்மில் பெரும்பாலானோருக்கு ஏதேனும் ஒரு தினசரிப் பயிற்சி இருக்கக்கூடும். தியானம், ஜபம், சத்சங்கம் அல்லது கோயில் வழிபாடு ஆகியவை மனதை ஒருமுகப்படுத்தும் என்பதை நாம் அறிவோம். ஆனால், அன்றாட நடைமுறைக்குத் திரும்பியதும் பழைய பழக்கங்கள் மீண்டும் தலைதூக்குகின்றன.

உள்முகத் தேடலின் சுடரை எப்போதும் அணையாமல் காப்பதே இதற்கான வழி. மனம் வெளியே இழுக்கப்பட்டாலும், மீண்டும் மீண்டும் போதனைக்குத் திரும்ப வேண்டும். நாம் திரும்பும் ஒவ்வொரு கணமும் நமது ஆன்மிகப் பிடிப்பை ஆழமாக்குகிறது; பகவானின் பாதையில் உறுதிபெற்று அருளுக்கு நம்மைத் திறக்கச் செய்கிறது.

இவ்வழிகாட்டுதலோடு நாம் நமது கடமைகளை அக்கறையுடனும் திறமையுடனும் ஆற்றும்போது, உலக விவகாரங்களுக்கு இயல்பான எல்லைகளை வகுத்துக் கொள்கிறோம். தேவையானதை மட்டும் செய்துவிட்டு, ஓய்வு கிடைக்கும்போது மனம் தன்னிச்சையாகச் சாதனையை நோக்கித் திரும்புகிறது. எனவே, ஒழுக்கமான வாழ்க்கை என்பது கடினமான கட்டுப்பாடோ சுமையோ அல்ல. அது மனதை மென்மையாக விழிப்புணர்வில் வைக்கும் ஒரு கலை—அங்கே அன்றாடச் செயல்பாடுகளும் உள்முகப் பார்வையும் இணைந்தே பயணிக்கின்றன.

### தர்ம நெறிசார்ந்த வாழ்வின் பயன்

பகவானை நோக்கித் திரும்புவதே அருள்தான்; அது பல பிறவிகளில் சேர்த்த புண்ணியத்தின் கனிவு. அந்த அருள் நமது அன்றாட வாழ்வில் வெளிப்பட

வேண்டும். அது பாரமான கடமையாக இல்லாமல், வாழ்வின் அமைதியான மையமாக மாற வேண்டும். முதுமையோ நோயோ நம்மை முடக்குவதற்கு முன்பே அதை நாம் போற்றி வளர்க்க வேண்டும். பகவானை மையமாகக் கொண்ட தர்ம வாழ்வின் உண்மையான பலன்: அமைதியான மகிழ்ச்சியும், மாறாத மன அமைதியும் தான்.

இத்தகைய தினசரி ஒழுக்கமும் பக்தியுமே பகவானின் அருளை இப்போதும், நாம் இவ்வுலகை விட்டுப் பிரியும்போதும் நமக்குப் பாதுகாப்பாக மாற்றும். உடலின் வலி தவிர்க்க முடியாததாக இருக்கலாம்; ஆனால் துன்பம் அப்படிப்பட்டதல்ல! இதைவிடப் பெரிய ஆசீர்வாதம் நமக்கு வேறு என்ன வேண்டும்?

முகவைக் கண்ண முருகனார் ரமண புராணத்தில் பாடியது போல:

கெடுத்தலரும்வல்வினையைக் கீண்டுபூண்டோடே
அடர்த்தல்அரும் உட்பகையும் அட்டோன் அடிவெல்க!

(127/128)

வெல்வதற்கரிய காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாத்ஸர்யம் ஆகிய ஆறு உள் எதிரிகளையும் அடியோடு அழித்து, ஆழ வேரூன்றிய எனது வல்வினைகளின் மூலத்தை அறுத்தெறிந்த பகவானின் திருவடிகளுக்கு வெற்றி உண்டாகட்டும்!

பணிவுடனும் பக்தியுடனும்,

வேங்கட் எஸ். ரமணன்

# அகத்தோடுரையாடல்

## சத்யநாராயணன்

*சந்தக் கலிவிருத்தம்; பண்: சாதாரி; ராகம்: பந்துவராளி*

*சந்தம்: தனதனன தனதனன தனதனன தனதனன தனனதனதா*

*"சுரருலகு நரர்கள்பயில்..." எனும் சம்பந்தர் தேவாரப் பாடலைத் தழுவியது:*

### 1. தக்ஷிணாமூர்த்தியாய்..

ஒருமுடிவி லருவடிவு தருவடியி லருள்வடியு முருவுடைபிரான்
வருமடியர் பரமடைய குருவடிவில் மருமடியை மருவிடுவதாற்
கருமுடியு மிருளுடையு மொருவிடியல் வருகடிகை கருதுமடியார்க்
கொருமுடிவு குருரமணர் திருவடிகள் அருகடைய வுருகிடகமே

பொருள்: தருவடியில் ஒரு முடிவேயில்லாத அருவடிவும் அருள்வடியும் உருவெடுத்து அமர்ந்த பிரான் (தக்ஷிணாமூர்த்தி), தன்னை அண்டி வரும் அடியார் பரத்தை அடைவதற்கென குரு வடிவில் (அண்ணா) மலை மடியைத் தழுவி அமர்ந்திருப்பதால், மீண்டும் பிறவாதிருக்கும் படி கரு நுழைவது முடியவும், இருளான அஞ்ஞானம் உடையவும், ஞான விடியல் வரும் நல்ல நேரம் வேண்டும் அடியார்க்கெல்லாம் ஒரே ஒரு குறிக்கோள் அந்த குரு ரமணர் திருவடிகளே. ஆகவே அவற்றின் அருகை அடைய உருகிடு என் அகமே!

### 2. தேவிகாலோத்தரமுரைத்த சிவனாய்...

அத்துவித முத்திநிலை பத்தர்பெற உத்திவகை யத்தனையுமே
முத்துவத னத்துமைகொ ளுத்திரமு ரைத்தசிவ முத்தனுளதாற்
சித்துவதை பித்துமய மித்தையுறை புத்தியிலி செத்தழியுமுன்
வத்துவித யத்திலுணர் முத்தனருள் வித்தைபயின் மத்திடகமே

பொருள்: அத்வைத முக்தி நிலை பக்தர் பெற எத்தனை உத்திவகைகள் உள்ளனவோ அத்தனையும் (தேவிகாலோத்தரம் வாயிலாக) முத்து போன்ற வதனத்தையுடைய உமையாள் கேட்க, உத்திர வடிவில் உரைத்த சிவன் என்னும் முக்தன் உள்ளத்தில் எப்பொழுதும் இருக்கிறான். அவன் உள்ளபலத்தில், சித்தும் (தந்திரம்) வதையும், பித்தும் நிறைந்த மாயவுலகில் (மித்யையில்) வாழும் புத்தியிலியான யான், மரணம் வந்து அழியும் முன், (ஏகமான) பொருளை இதயத்தில் உணர் முத்தன் (ரமணன்) அருளிய வித்தையை (ஆத்ம விசாரத்தைப்) பயில்வாய், அதன் மூலம் மத்தால் கடைவது போல் உள்ளத்தை கடைவாய் என் அகமே.

### 3. பழமாய் நின்ற குகனாய்...

அன்றுறவ கன்றுமலை குன்றுமுடி சென்றுபர மன்றையணையா
நின்றுதவ மொன்றபழ மென்றுகனி கின்றபரம் நின்றகுகனால்
இன்றுபல மன்றுதிரி புன்றலைய னென்றனக மென்றுமடியு
முன்றனவ மின்றொழிய மன்றனரு ணன்றழலி லொன்றிடகமே.

பொருள்: அன்று தந்தை தாய் தமயனென்னும் உறவுகளை விட்டகன்று, குன்று முடி மேல் ஏறி நின்றான் குகன். அவன் பரமல்லாததை அணையமாட்டான். அவன் தவத்தில் ஒன்றித் தான்தானே பழமாகிக் கனிந்து பரத்தில் நின்றான். (பகவான் ரமணரும் தன் உறவுகளை விட்டு திருவண்ணாமலை வந்து பரத்தில் ஒன்றி நின்றவர்) அந்த குகனால் இன்று பவம் திரியும் சிற்றறிவு கொண்ட எனது அகங்காரம் (என்னும் அரக்கத்தனம்) என்று மடியும்? என் அகமே, உன்றன் அவம் இன்றே ஒழிய (இருதய) மன்றில் நடமிடும் அருணேசன் (ரமணேசன்) தனது தவத்தழலில் கலந்து ஒன்றிடுவாய். (அன்றே அகங்காரம் மடியும் என்க.)

### 4. மதுரை மீனாட்சியின் தனயனாய் ..

*மேனியிடம் தானிணைய வானனடை தேனகர மீனின்விழியாள்*
*ஞானமடி ஈனுமழன் மோனவடி வானமகன் ஞானியவனே*
*ஈனவுடல் நானதெனு மூனமழி மேனிலையை ஈனவருதாய்*
*தானையடை ஞானவழி மோனனடி ஏனைவிடு தானதகமே.*

*பொருள்:* மேனியின் இடப்புறத்தே தான் இணைய வானனாகிய சிவனை அடைந்தவளான மதுரை நகரத்து (இமை மூடாது காவல் புரியும்) மீன் போன்ற விழிகொண்ட பராசக்தி அன்னையின் ஞான மடி ஈனும் அழல் நெருப்பான, மோன வடிவான, அவளது மகன், ஞானி (ரமணன்) அவனே (மதுரையில் மீனாக்ஷியின் ஆளுகையில் பகவான் ரமணர் மரணானுபவத்தில் ஆத்ம சாட்சாத்காரத்தை அடைந்தார்) ஈனமான இவ்வுடலே நான் என்று எண்ணும் ஊனத்தை அழிக்கும் மேலான ஆன்ம நிலையை ஈன வரும் தாயுமாவான். (ஆதலால்) அகங்காரத்தை விட்டு தனது மூலத்தை அடையும் ஞானவழி மோனனான ரமணன் தாளே (என்றறிந்து பிடித்துக்கொள்).. மற்றெல்லாம் விட்டுவிடு.. அதுவே தானாகும் எனதகமே.

(தொடரும்)

**ஸ்ரீ ரமணாஸ்ரமம், திருவண்ணாமலை**
**தகவல் மற்றும் தொடர்புக்கு**

For Website: https://www.gururamana.org
For Accommodation: https://stay.gururamana.org
For Parayana: https://parayana.gururamana.org
For Search: https://search.gururamana.org



# வேதம் காட்டும் வாழ்க்கை நெறி

### டாக்டர் அபிநவம் ராஜகோபாலன்

### அத்தியாயம் – 2 கவலைகளும் ஆனந்தமும்

“அவந்திகா” அடுக்கு மாடிக் கட்டிடத்தின் காம்பௌண்டை சுற்றியுள்ள புல்தரையில் புரொபசர் வித்யாசாகர் வாக்கிங் சென்று கொண்டிருந்தார். சுற்றியுள்ள பெஞ்சுகளில் அந்த குடியிருப்புவாசிகள் சிலர் அமர்ந்திருந்தனர். ஒரு மூலையில் வேலுசாமி சோர்ந்த முகத்துடன் காணப்பட்டார்.

“என்ன விஷயம்? சுரத்தில்லாமல் இருக்கிறீர்கள்.”

“புரொபசர் சாரா, வாங்க. உக்காருங்க.”

“உடம்பு சரியில்லயா?”

“எனக்கு உடம்பு நல்லாத்தான் இருக்கு. ஒய்ஃபுக்குத்தான் சுகர் எகிறிப்போய் 400 ஐத் தாண்டிருச்சு. ரெண்டு நாள்போல ஐ.சி.யூ.ல இருந்து இன்னிக்கு காலைலதான் டிஸ்சார்ஜ் பண்ணினாங்க. கொஞ்சம் காத்தாட வெளிய வந்தேன்.”

“அடப்பாவமே. போன வாரம்கூட சுடச்சுட கீரைவடை பண்ணி எல்லோருக்கும் கொடுத்தாங்களே.”

வேலுசாமி நல்ல மனுஷர். உபகாரி. அவர் கதையைக் கேட்ட அனைவரும் அதிர்ந்து போனார்கள்.

“கவலை...கவலை, இதுதான் நம்ம லைஃப்னு ஆயிடுச்சி. பாவம் வேலுசாமி” என்று வேதாந்தம் சொன்னார். அவருக்கும் ஏகப்பட்ட பிரச்சினைகள். பையன் படிப்பைப் பாதியில் நிறுத்திவிட்டான். இரண்டு பெண்களுக்குக் கலியாணம் செய்ய

வேண்டும். "எலி தேங்காயை சுரண்டி சுரண்டி சாப்டற மாதிரி கவலைகள் நம்மை அரிச்சு ஒண்ணுமில்லாம ஆக்கிடறது பாருங்கோ. அதுவும் இந்தக் கலியுகத்துல ஒண்ணுமாறி ஒண்ணுனு பிரச்சனைகள் வந்தவண்ணம் இருக்கு."

பார்வதி சொன்னாள், "என் கவலையே எலியாலதான். என்னோட ரெண்டு ஜரிகை போட்ட பட்டுப் பொடவையை எலி கடிச்சு கொதரிடுச்சு. மாமியாருக்குத் தெரிஞ்சா ரணகளமாக்கிடுவாங்க. ஹஸ்பெண்டும் 'இப்படி அலக்ஷியமாயிருக்கயே' ன்னு திட்றாரு."

வித்யாசாகர் நிதானமாகச் சொன்னார், "கலி காலத்தில் மட்டுமில்லை, எந்தக் காலத்துலயும் இந்த மாதிரிப் பலவிதமான பெரிய, சிறிய பிரச்சினைகள் இருந்துருக்கு. அதில சுவாரசியம் என்னன்னா இப்ப வேதாந்தமும் பார்வதியும் எலி கடிக்கறது பத்தி பேசினா பாருங்கோ, இதே வார்த்தையை உபயோகப்படுத்தி வேதம் பேசறது. சற்று துக்கத்துடன் ஒரு ரிஷி சொன்ன வார்த்தை "நெசவுத் தறியை எலிகள் கடித்துக் கொதறுவதைப் போல கவலைகள் என் மனதை அரிக்கின்றன. ஒரு தந்தையைப் போல என்னிடம் கருணை காட்டி ஆண்டவா, நீ அருள் புரி" இது ருக் வேத வரிகள். அப்படியே நம்ப வேதாந்தம் சொன்னாற் போல. அந்தக் காலத்திலேயே அப்படி கவலைகள் இருந்திருக்கும் போலத் தெரிகிறது. ஒருவேளை, முக்காலமும் உணர்ந்த ரிஷிகள் நம்மீது உள்ள கருணையால் அப்பொழுதே இப்படி ஒரு வேண்டுகோளை முன் வைத்தார்களோ என்னவோ. வேத வரிகளைப் பார்ப்போம்"

பிதேவ நோ பவ – "தந்தையைப் போல என்னைக் காப்பாற்றுங்கள்", என்று ஒருவன் வேண்டுகிறான். ஏன்? தந்தையிடம் உரிமையுடன் கேட்கலாம் இல்லையா?

மூஷோ ந ஸிஸ்னா வ்யதந்தி "எலிகள் நூல் இழைகளைத் தங்கள் பற்களால் இடை விடாது கடிப்பது போல நான் கவலையில் உழன்று தவிக்கிறேன்" (ருக். 10.33.3)

வேதாந்தம் சொன்னார். "ஆச்சரியமா இருக்கே, நம் மனசை வேதம் அப்படியே பிரதிபலிக்கிறதே. நான் ஒரு கதை கேள்விப்பட்டிருக்கிறேன். மகாபாரதத்தில் யக்ஷ ப்ரஸ்னம் என்று ஒரு பகுதி. அதில் யக்ஷன், தருமனிடம் பல கேள்விகள் கேட்கிறான். அதற்கெல்லாம் சரியான விடையை தருமன் அளிக்கிறான். அதில் ஒரு கேள்வி "புல்லினும் அற்பமானது எது? பதில்தான் சுவாரசியம். தருமன் சொல்கிறான் "புல்லினும் அற்பமானது கவலை"

"வாஸ்தவம். ஆனால் அற்பமோ இல்லையோ, யாருக்குக் கஷ்டம் இல்லை? எனக்கு எதாவது குழப்பம், துக்கம்னாக்கா முருகனைக் கும்பிடுவேன். உடனே ஆறுதல் கிடைக்கும்" என்றார் பார்வதி.

"இதையே திருக்குறளிலும் பாக்கலாம் "பற்றுக பற்றற்றான் பற்றினை, அப்பற்றினை பற்றுக பற்று விடற்கு" என்று வள்ளுவர் பாடினாரே. அதுவும் இறைவனைத்தவிர வேறு பற்றில்லை என்று ஆணித்தரமாக உணர்த்துகிறது இல்லையா." என்று முடித்தார் வித்யாசாகர்

வித்யாசாகரின் விளக்கத்தால் வேலுசாமி சற்று மனம் தேறி "இதெல்லாம் கொஞ்சம் நிம்மதியைக் கொடுக்குதுங்க. ஆனாக்க, அந்தக் காலத்தில் இந்த மாதிரி பிரச்சனைகள் இல்லை. இப்ப வரவர தினம் தினம் புதுப் புது கவலைகள், தினுசு தினுசா டென்ஷன்கள். நிம்மதியே இல்லாம போச்சு. தாங்க முடியலிங்க."

அவரைத் தட்டிக் கொடுத்து ஆறுதல் சொல்லி வித்யாசாகர் தொடர்ந்தார், "அப்படிச் சொல்ல முடியாது.

*கவலைகள் எல்லாக் காலத்திலும் உண்டு. வேத கால மனிதர்களுக்கும் பல குழப்பங்கள் இருந்தன. மனிதன் தோன்றியது முதல் கவலைகள் ஆசாபாசங்கள் அவனை அலைக்கழித்தன. மனம் நிம்மதி இழக்கிறது. அந்த சமயங்களில் ஆண்டவனிடம் செல்கிறோம். இது எல்லா காலத்திலும் எல்லா மனிதருக்கும் உண்டு.*

*“நமக்கு இருக்கும் இந்த உணர்வை ஒரு ருக்வேத மந்திரத்தில் பார்க்கலாம்.*

*“என் மனதில் சதா எண்ணங்கள் ஓடிக்கொண்டு இருக்கின்றன. உணர்ச்சிகள் அலைக்கழிக்கின்றன. அவை எல்லாத் திசைகளிலும் ஓடுகின்றன.*

*இறைவனைத்தவிர ஆறுதலளிக்க எவருமில்லை. அவனிடத்தில் என் அனைத்து விருப்பங்களும் சென்று அடைகின்றன.”*

*“அச்சோ, என்னோட பிரச்சனைய நேர்ல கேட்டாப்பல அப்படியே வேதம் பேசறதே. இது வேதத்துல எங்கங்க வரது?” வேலுசாமி வியப்புடன் கேட்டார்.*

*“ருக்வேதம் பத்தாம் மண்டலம் 64 வது சூக்த்தில் இதைப் பற்றிய விவரம் பார்க்கலாம். “ந மர்டிதா வித்யதே அன்ய:” (ருக். 10.64.2) என்னும் வரிகளில் இறைவனைத்தவிர ஆறுதலளிக்க எவருமில்லை என்னும் கருத்து வருகிறது.”*

*“அட வேதத்துல இவ்வளவு விஷயம் இருக்கா? நம்ம கவலை குழப்பம் எல்லாத்துக்கும் வழியைக் காட்டுதே. முழு மந்திரம் சொல்லுங்க, கேப்போம். ” பார்வதி கண்ணைத் துடைத்துக் கொண்டாள்.*

*வித்யாசாகர் சொன்னார்,*

***ந மர்$^{3}$டி$^{3}$தா வித்$^{3}$யதே அந்ய ஏப்$^{4}$யோ தே$^{3}$வேஎ மே***
***அதி$^{4}$ காமா அயம்ஸத ॥***

வேலுசாமி, இறைவனைத்தவிர ஆறுதலளிக்க எவருமில்லைங்கறதுதான் சரி. நான் ஒரு நடை புள்ளையார் கோவிலுக்குப் போயி சாமி கும்புட்டு வரேன். புரொபசர் சார். தேங்கஸ். மனசு கொஞ்சம் நிம்மதியா இருக்கு.” என்று கிளம்பினார்.

வித்யாசாகர் தொடர்ந்தார். “ஆனால் பல இடங்களில் வேதங்கள், இறைவனை வரம் கொடுக்கும் சக்தியாக இல்லாமல், ஒரு நெருங்கிய உறவாகவே பார்த்தன. இந்த ருக் வேதத்தின் எட்டாவது மண்டலத்தில் உள்ள சுலோகம் ஒரு மகிழ்ச்சி வடிவமான உறவையே வெளிப்படுத்துகிறது.

*ஆனந்த வடிவான இறைவன் ஒரு பரிசுத்தமான பரம்பொருள்;*
*அது புனிதப்படுத்தும் ஒரு சக்தி; அழகும் ஆற்றலும் படைத்தது;*
*அது நெருக்கமான ஒரு உறவு – நம் அனைவருக்கும்*
*(ருக். 8.43.31)*

பார்வதி “நம் அனைவருக்கும் இறைவன் நெருக்கமான ஒரு உறவு என்னும் வரிகள் தைரியத்தைக் கொடுக்குதுங்க.”

“வாஸ்தவம்” என்ற வித்யாசாகர் மேலும் விளக்கினார். “வேதம் கண்ட ஆனந்தமயமான இறைவனையே வேறு விதமாக நமக்குக் காண்பிக்கிறது தைத்திரீய உபநிஷதம். இதில் வரும் ப்ருகு வல்லி என்ற பகுதி புகழ் பெற்றது. ஒரு கதையைப் போன்ற அமைப்பு இதற்கு மேலும் அழகு சேர்க்கிறது. ப்ருகு என்ற இளைஞன் தன் தந்தையாகிய வருணனைப் பார்த்துக் கேட்கிறான். “ஐயனே எனக்கு பிரம்மத்தை உபதேசம் செய்யுங்கள்.” அவன் தந்தை அதற்கு நேரடியாக பதில் அளிப்பதில்லை. அதற்கு பதிலாக ஒரு நிபந்தனையை விதிக்கிறார். “நீ தவம் செய்து

பிரம்மத்தை அறிவாயாக. தவமே பிரம்மம்." என்று சொல்லி அனுப்புகிறார்.

தந்தை சொல்லை சிறந்த மந்திரமாக ஏற்று அந்தச் சிறுவனும் தவம் செய்யச் செல்கிறான். முதலில் இக வாழ்க்கைக்குத் தேவையான பொருட்களை பிரம்மமாக உணருகிறான். அவையே அன்னமய கோசம் எனப்படும். மீண்டும் தவம் செய்யத் தூண்டுகிறார் அவருடைய தந்தை. அவனும் படிப்படியாக ப்ராணன், மனம், விஞ்ஞானம் என்று ஒவ்வொரு நிலையையும் தாண்டி இறுதியில் பிரம்மம் என்பது ஆனந்தமே என்பதை உணர்ந்தான். ஆனந்தோ ப்ரஹ்மேதிவ்யஜானாத் என்னும் வரிகள் அற்புதமானவை

ஆனந்தமே இறைவன்; இதிலிருந்து உயிர்கள் தோன்றுகின்றன. தோன்றிய உயிர்கள் வளருகின்றன. இறுதியில் அதனிடமே புகல் அடைகின்றன. என்று உணர்கிறான் அச்சிறுவன்.

மிக உயர்ந்த தத்துவத்தை எளிதாக போதிக்கும் இந்த வரிகளைப் பார்ப்போம்.

*ஆநந்தோ$^{3}$ ப்$^{3}$ரஹ்மேதி வ்யஜானாத் ।*

*ஆநந்தா$^{3}$த்$^{3}$த்$^{4}$யேவ கல்விமானி பூ$^{4}$தானி ஜாயந்தே ।*

*ஆநந்தே$^{3}$ன ஜாதானி ஜீவந்தி ।*

*ஆநந்த$^{3}$ம் ப்ரயந்த்யபி$^{4}$ ஸம்விபயந்தீதி ।।*

வேதம் சொன்ன விளக்கத்திற்கு ஒரு வேதாந்தப் பின்னணியை அழகாக அமைத்துத் தருகிறது மேற்கண்ட உபநிஷத வாக்கியங்கள்.

தமிழ்ப் பேராசிரியை வித்யாவதி பேசினார். "இந்த சந்தர்ப்பத்தில் திருநாவுக்கரசர் இயற்றிய ஒரு அழகிய தேவாரப் பாடல் நினைவுக்கு வருகிறது. எளிமையான பக்தரான அந்த உழவாரப்படை தாங்கிய உத்தமர் கீழ்க்கண்டவாறு சிவபெருமானைத் துதிக்கிறார்.

*நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்*
*நரகத்தில் இடர்ப்படோம் நடலை அல்லோம்*
*ஏமாப்போம் பிணி அறியோம் பணிவோம் அல்லோம்*
*இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை.*

இறைவனை பணிந்து வழங்கிய அந்த எளிய அடியாரின் உள்ளத்திலே துணிவும் நம்பிக்கையும் மகிழ்ச்சியும் பீறிடுவதை நாம் நோக்குகிறோம். இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை—என்னும் இந்த உணர்வு நாம் கண்ட வேத மந்திரங்களின் பிற்கால எதிரொலியே!!"

கைதட்டி மகிழ்ந்தார் வித்யாசாகர். "அருமை. வேதங்களும் நம் சைவ ,வைஷ்ணவ ஆகமங்களும் ஒரே கோட்டில்தான் பயணிக்கின்றன."

"ஆனந்தோ ப்ரஹ்மேதிவ்யஜானாத் என்னும் உபநிஷத வரிகளும் இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை என்னும் தேவார வரிகளும் மனசுல அப்படியே பதிஞ்சுடுத்து. தேங்க்ஸ்." என்று கிளம்பினார் வேதாந்தம்.

(தொடரும்)

**தொட்டதெல்லாம் ஜெயிப்பது மட்டுமே மனவலிமை அன்று**

*எடுத்த காரியம் அனைத்திலும் வெற்றி பெறுவதே மனோபலம் என்று நாம் எண்ணுகிறோம். ஆனால், அது முழுமையான உண்மையல்ல.*

*மெய்யான தீரத்துவம் எது?*

*வெற்றியிலும் தோல்வியிலும் மனம் சிறிதுமே தளராது நிலைத்து நிற்பதே உண்மையான தீரம்.*

*தொடர் வெற்றி: மனிதனுக்கு அகந்தையை மட்டுமே மேலிடச் செய்யும்.*

*இடைவரும் தோல்வி: வெற்றியையும் தோல்வியையும் சமமாக நோக்கும் உயரிய மனப்பக்குவத்தைப் புகட்டும்.*

*ஒருவரின் தீரத்துவம் அவர் அடையும் முடிவுகளால் அளவிடப்படுவதில்லை; எத்தகைய சூழலிலும் கலங்காதிருக்கும் சமநோக்கே தீரத்தின் மெய்யான அடையாளம்.*

*— பகவான் ஸ்ரீ ரமண மகரிஷி*



# ரமண புராணம்

## விளங்கியவகையில் விளக்கும்
## ஆகுரா

### ரமண புராணம் வரிகள் (185–198)

*அஞ்சுபூதத்துள்ளும் அவ்வதன் பண்படைவே*
*எஞ்சல் இல்லாதடைத்த எம்மான் தாள் போற்றி*
*மதியினிடைத் தண்மை கதிரினிடை வெம்மை*
*மதியினிடை ஓர்மை வகுத்தோன் அடி போற்றி*
*தொந்த நிர்த்தொந்தம் அவைதொன்றே உயிர்த்தொகைதம்*
*பந்த முத்திக்காகப் படைத்தோன் தாள் போற்றி*
*அடியார்க்கு நல்லான் அறம் தவறும் பொல்லாக்*
*கொடியார்க்கு வல் இடியாம் கூற்றுவன் தாள் போற்றி*
*அடியேத்தும் அன்பரைத் தன் அந்தம் இல் வீட்டின்பக்*
*குடியேற்றும் மிக்க குணநலத்தான் எம்தம்*
*மிடியாற் குறைந்த குடில் வேவ அருள்தீயாற்*
*பொடியாக்கும் மூரற் புராந்தகன் தாள் போற்றி*
*முழுமையுமாய் நின்றும் முனிவரனாய் எம்மை*
*எழுமையும் ஆட்கொண்ட இறைவன் அடி போற்றி*

*அஞ்சுபூதத்துள்ளும் அவ்வதன் பண்படைவே*
*எஞ்சல் இல்லாதடைத்த எம்மான் தாள் போற்றி*

**பத உரை:**

*அஞ்சு பூதத்துள்ளும்:* ஐந்து பூதங்களின் உள்ளேயும்; *அவ்வதன் பண்படைவே:* அதன் அதன் பண்புகளை, குணங்களை உள்ளடக்கி; *எஞ்சல் இல்லாது அடைத்த:* குறைகள் எதுவுமின்றிச் சிறப்பாக அடைவித்தல், செய்வித்தல்; *எம்மான்:* எம்மான் என்ற சொல்லின் பொருள் "எங்கள் பெருமான்" அல்லது "எங்கள் தலைவன்/இறைவன்" என்பதாகும். இது தமிழில் பெருமைக்குரியவரையும், இறைவனையும் அல்லது

*தலைவனையும் குறிக்கப் பயன்படுத்தப்படும் ஒரு விளி மற்றும் மரியாதைக்குரிய சொல்தொடராகும் (எங்கள்+மான் = எம்மான்). சங்க இலக்கியங்களிலும் பக்தி இலக்கியங்களிலும் இந்தச் சொல் பரவலாகக் காணப்படுகிறது; தாள் போற்றி: பாதங்கள் வாழ்த்துவோம்.*

*விரிவான விளக்கம்:*

*அஞ்சு பூதம்: இந்தியத் தத்துவக் கோட்பாடுகளின்படி, பிரபஞ்சமும் நமது உடலும் கீழ்க்கண்ட ஐந்து அடிப்படைப் பூதங்களால் (கூறுகளால்) ஆக்கப்பட்டுள்ளதாக நம்பப்படுகிறது;*

*நிலம் (பூமி/Prithvi): உறுதிப்பாடு, வடிவம் மற்றும் ஆதாரம்; நீர் (Apas/Jala): திரவ நிலை, வாழ்வாதாரம் மற்றும் இயக்கம்; தீ (அக்னி/Agni): வெப்பம், ஆற்றல் மற்றும் உருமாற்றம்; காற்று (Vayu): சுவாசம், இயக்கம் மற்றும் புத்துணர்ச்சி; ஆகாயம் (வெளியும் இடமும்/ Akasha): மற்ற நான்கு பூதங்களும் இயங்க இடமளிக்கும் வெளி.*

*சிறப்புச் சிறப்புகள் (பஞ்சபூதத் தலங்கள்):*

*தென்னிந்தியாவில், சிவபெருமானின் பெருமையை உணர்த்தும் வகையில் உள்ள ஐந்து முக்கியத் தலங்கள் (பஞ்சபூதத் தலங்கள்) இந்த ஐந்து பூதங்களின் வடிவங்களாகப் போற்றப்படுகின்றன:*

*காஞ்சிபுரம் (ஏகாம்பரநாதர் கோவில்): நிலம் (Prithvi); திருவானைக்காவல் (ஜம்புகேஸ்வரர் கோவில்): நீர் (Water); திருவண்ணாமலை (அண்ணாமலையார் கோவில்): தீ (Fire); ஸ்ரீகாளஹஸ்தி (காளஹஸ்தீஸ்வரர் கோவில்): காற்று (Air); சிதம்பரம் (நடராஜர் கோவில்): ஆகாயம் (Space).*

*பஞ்சபூதத் தத்துவம் (நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம்) என்பது ஒரு தனி மனிதரால் கண்டுபிடிக்கப்பட்டோ அல்லது உருவாக்கப்பட்டோ அறியப்பட்ட ஒன்றல்ல.*

இது பண்டைய இந்திய வேத காலம், உபநிஷதங்கள் மற்றும் சித்தாந்த மரபுகளில் உருவான ஒரு பிரபஞ்ச அறிவியல் மற்றும் ஆன்மீகக் கோட்பாடாகும்.

**இதன் பின்னணி மற்றும் உருவாக்கம் குறித்துக் கருதப்படுவன:**

வேத மற்றும் உபநிஷத காலத் தத்துவம்: தைத்திரீய உபநிஷதம் போன்ற பண்டைய வேத நூல்கள் பிரபஞ்சத்தின் படைப்புப் பரிணாமத்தைப் பற்றிப் பேசும்போது, ஆகாயத்திலிருந்து காற்று, காற்றிலிருந்து தீ, தீயிலிருந்து நீர், நீரிலிருந்து நிலம் தோன்றியதாக விளக்குகின்றன. இவைகளை இந்தியத் தத்துவ மரபில் 'பஞ்ச மகாபூதங்கள்' என்று அழைப்பர்.

ஆயுர்வேதம் மற்றும் யோகா: இந்திய மருத்துவ முறையான ஆயுர்வேதத்திலும், யோகக் கலையிலும் இந்த ஐந்து பூதங்களின் கோட்பாடு அடிப்படையானது. மனித உடல் இந்த ஐந்து கூறுகளால்தான் இயங்குகிறது என்ற கருத்தை மகரிஷிகளும், பண்டைய முனிவர்களும் தங்களது அனுபவப் பார்வையின் மூலம் கண்டறிந்து தொகுத்தனர்.

சித்த மரபு: தமிழ்நாட்டில் சித்தர்கள் "அண்டத்தில் உள்ளதுதான் பிண்டத்திலும் உள்ளது" என்ற தத்துவத்தின் அடிப்படையில், மனித உடலையும் பிரபஞ்சத்தையும் இணைத்து பஞ்சபூதங்களைப் பற்றி விரிவாகப் பாடியுள்ளனர்.

சுருக்கமாகக் கூறின், இது ஒரு குறிப்பிட்ட நபரால் உருவாக்கப்பட்டது என்பதைவிட, பண்டைய இந்திய ரிஷிகள், முனிவர்கள் மற்றும் தத்துவ ஞானிகளின் கூட்டு ஆன்மீக மற்றும் அறிவியல் தேடலில் இருந்து உருவான ஒரு கோட்பாடாகவே கருதப்படுகின்றது.

ஐம்பூதங்களின் (நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம்) அத்தனை பண்புகளையும் தன்வயப்படுத்தி, பிரபஞ்சம்

முழுவதிலும் நீக்கமற நிறைந்துள்ள பரம்பொருளே இறைவன் என்ற ஆன்மீக மற்றும் இலக்கியக் கருத்து இங்குப் பொருள்படுகிறது.

பண்டைய தமிழ் இலக்கியங்களிலும் ஆன்மீக நூல்களிலும் அரசர்களை அல்லது இறைவனை வர்ணிக்கும்போது, ஐம்பூதங்களின் தனித்தனிப் பண்புகளை ஒப்பிட்டுக் கூறுவது மரபு.

இதனை விளக்கும் வகையில் மணிமேகலை, தேவாரம் அல்லது திருவாசகம் போன்ற பக்தி இலக்கியங்களில், இறைவன் ஐம்பூதங்களின் தன்மையாக விளங்குவதைப் பின்வருமாறு குறிப்பிடுவர்:

நிலத்தைப் போலப் பொறுமையும் உறுதியும் உடையவன்.
நீரைப் போலக் குளிர்ச்சியான அருளையும் அன்பையும் பொழிபவன்.
தீயைப் போலப் பகையை அழிக்கவல்ல ஆற்றலும் ஒளியும் கொண்டவன்.
காற்றைப் போல எங்கும் இயங்கக்கூடிய தன்மையைக் கொண்டவன்.
ஆகாயத்தைப் போல எல்லையற்றதாய், அனைத்தையும் தனக்குள் தாங்கி நிற்கும் பேராற்றல் கொண்டவன்.

இத்தகைய ஐம்பூதங்களின் அனைத்துப் பண்புகளையும் (எஞ்சல் இல்லாமல்/குறையில்லாமல் முழுமையாக) தன் அகத்தே கொண்டு, இந்த உலகையும் உயிர்களையும் தாங்கி இயக்கும் முழுமுதற் சக்தியே இறைவன் என்று ஆன்மீகத் தத்துவங்கள் கூறுகின்றன.

ஐந்து பூதங்களின் உள்ளேயும் அதன் அதன் பண்புகளை, குணங்களை உள்ளடக்கி குறைகள் எதுவுமின்றிச் சிறப்பாக அடைவித்தல் எம்பெருமானின் செயல். அவ்வாறு செய்விக்கும் எங்கள் இறைவனின் பாதங்களை வாழ்த்தி வணங்குவோம்.

மதியினிடைத் தண்மை கதிரினிடை வெம்மை
மதியினிடை ஓர்மை வகுத்தோன் அடி போற்றி

*பத உரை:*

*மதி: நிலவு; தண்மை: குளிர்ச்சி; கதிர்: சூரியன்; வெம்மை: வெப்பம், சூடு; மதி: அறிவு, புத்தி; இடை: நடுவில், இடையில்; ஓர்மை: நினைவு, விழிப்புணர்வு, கவனம், ஒருமைப்பாடு; வகுத்தோன்: பகுத்து ஒழுங்குபட அளித்தவன் (வகுத்தல் என்றால் பகுத்தல் அல்லது பிரித்தல்); அடி போற்றி: பாதங்கள் வாழ்க.*

*விளக்க உரை:*

*அறிவு: உளவியல் மற்றும் உடலியல் ரீதியாக நினைவாற்றல் (Memory) பல்வேறு முக்கிய வகைகளாகப் பிரிக்கப்படுகிறது. மனித மூளை தகவல்களை எந்தவகையில் சேமிக்கிறது மற்றும் கையாளுகிறது என்பதன் அடிப்படையில் நினைவாற்றலின் முக்கியப் பிரிவுகள் பலவாறாகப் பகுக்கப்படுகிறது. அவை:*

*உணர்வுசார் நினைவாற்றல் – குறுகிய கால நினைவாற்றல்; நீண்ட கால நினைவாற்றல் (நிரந்தரமாகச் சேமித்து வைக்கும் மாபெரும் நினைவகம்). கருத்துசார் நினைவாற்றல் – செயல்முறை நினைவாற்றல்; வெளிப்படுத்தும் முறை: வெளிப்படையான நினைவாற்றல், மறைமுக நினைவாற்றல் (நாம் தற்செயலாக அல்லது ஆழ்மனதின் வழியே வெளிப்படுத்தும் திறன்கள் மற்றும் பழக்கவழக்கங்கள்).*

*நிலவில் குளிர்ச்சியையும், சூரியனில் வெப்பத்தையும், மற்றும் அறிவினிடை பல்வேறு நினைவாற்றல்களையும் ஒழுங்குபட வகுத்துக் கொடுத்த இறைவனின் மலரடி போற்றி வணங்குவோம்.*

*தொந்த நிர்த்தொந்தம் அவைதொன்றே உயிர்த்தொகைதம்*
*பந்த முத்திக்காகப் படைத்தோன் தாள் போற்றி*

*பத உரை:*

*தொந்தம் – நிர்த்தொந்தம்: சமஸ்கிருதத்தில் 'த்வந்த்வ' (Dvandva) அல்லது தமிழில் 'இருமை'/'இரட்டைகள்'*

என்று குறிப்பிடப்படும் தத்துவப் பின்னணி இதுதான். வாழ்க்கையில் ஒன்றை ஒன்று பிரித்துப் பார்க்க முடியாத, ஒன்றின் இருப்பை மற்றொன்று உறுதி செய்யும் இயைபு ஜோடிகளைத்தான் இங்கு குறிப்பிடப்படுகிறது. உலகியல் வாழ்வில் தவிர்க்க முடியாத இத்தகைய இருடிகள் (இரட்டைகள்) பல உள்ளன:

விருப்பு – வெறுப்பு; இன்பம் – துன்பம்; லாபம் – நஷ்டம்; புகழ் – இகழ்ச்சி; மானம் – அவமானம்; பிறப்பு – இறப்பு; இருள் – வெளிச்சம்.

*தத்துவப் பின்னணி:*

இத்தகைய இருடிகளிலிருந்து (இரட்டைகளிலிருந்து) விடுபடுவதே ஆன்மீகத்தின் உச்ச நிலையாகக் கூறப்படுகிறது.

தொந்தம்: இந்த இருடிகளால் (விருப்புவெறுப்பு போன்ற பற்றுக்களால்) மனதில் ஏற்படும் பிணைப்பு (இதில் முப்புடிகளும் அடங்கும்).

நிர்த்தொந்தம் (நிஸ்தொந்தம்): இந்த இருடிகளுக்கு அப்பாற்பட்டு, இன்பதுன்பங்களிலோ, விருப்பு வெறுப்புகளிலோ சமநிலை குலையாமல் (சமத்துவ தத்துவத்தில்) நிற்கும் நிலை (எ.கா: “இன்பமும் துன்பமும் சமமெனக் கொள்வது”).

அவை தொன்றே: தொன்றுதொட்டே; உயிர்த்தொகை: வெளியுலகில் தோன்றும் கோடிக்கணக்கான உடல் கொண்ட கூட்டம்; தம்: அவற்றின் (உயிர்த்தொகைக்காக).

பந்த முத்திக்காக: பற்று மற்றும் அந்தப் பற்றுகள் கடந்த ஆன்ம நிலைக்கும் என்பதாகும் (ஏகன் அநேகன்; அந்த அநேகன் அகம் நோக்கில் ஏகன்). பிறவிப்பிணி என்னும் பந்தத்திற்கும், அதிலிருந்து பெறும் விடுதலைக்கும் (முத்திக்கும்) ஏற்ப; படைத்தோன்: படைத்தவன்; தாள் போற்றி: பாதம் போற்றுவோம்.

**விளக்க உரை:**

உலகில் உள்ள உயிர்த்தொகையின் கூட்டத்திற்கு, அவர்களின் அறியாமைக்கு ஏற்ப பந்தத்தையும் (உலகப் பற்றுகளையும்), பின்னர் பற்றற்ற நிலையாகிய நிர்த்தொந்தத்தையும் (முத்தியையும்) அனுபவித்து உய்யும் பொருட்டு, அவற்றை முறையே தோற்றுவித்த முழுமுதற் கடவுளின் திருவடிகளைப் போற்றி வணங்குவோம்.

அடியார்க்கு நல்லான் அறம் தவறும் பொல்லாக்
கொடியார்க்கு வல் இடியாம் கூற்றுவன் தாள் போற்றி

**பதவுரை:**

அடியார்க்கு நல்லான்: இறைவனின் அடியார்களாகிய நல்லவர்களுக்கு எப்போதுமே நன்மைகளைச் செய்பவனும்; அறம் தவறும் பொல்லாக் கொடியார்க்கு: அறநெறிகளை மீறித் தீமை செய்யும் கொடியவர்களுக்கு; வல் இடியாம்: கொடிய இடி போன்றவனும்; கூற்றுவன் தாள் போற்றி: நீதி அல்லது விதியின் அடிப்படையில் நன்மைதீமைகளைப் பிரித்து வழங்குபவன். அந்த நீதி கொடுக்கும் தர்மதேவனின் திருவடிகளைப் போற்றி வணங்குவோமாக!

**விளக்கம்:**

குறிப்பிட்டுள்ள வரிகள் இறைநீதி மற்றும் தர்மத்தின் மேன்மையை ஆழமாக விளக்குகின்றன:

அன்பும் பாதுகாப்பும்: இறைவனோ அல்லது நீதியை நிலைநிறுத்தும் சக்தியோ, தன் நெறிப்படி வாழும் நல்லடியார்களுக்கு அரணாக நின்று நன்மைகளை வழங்குவார். அவர்களைக் காப்பது அவரது முதன்மைக் கடமையாகும்.

தண்டனையும் நீதியும்: எவன் ஒருவன் அறநெறிகளை மீறித் தீய செயல்களில் ஈடுபடுகிறானோ, அவனுக்குத் தண்டிக்கும் காலனின் (எமனின்) இடியைப் போன்ற கடுமையான தண்டனை உறுதியாகக் கிடைக்கும்.

இப்பாடல் வரிகள் மனிதர்களின் செயல்களுக்கேற்பக் கிடைக்கும் பலன்களைத் தெளிவுபடுத்துகிறது. நல்வழி நடப்பவர்கள் காக்கப்படுவார்கள், தீயவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்ற இயற்கை நியதியை இது உணர்த்துகிறது ("கர்மம் பயன் தரல் கர்த்தனது ஆணையால்" – உபதேச வுந்தியார்).

அடியேத்தும் அன்பரைத் தன் அந்தம் இல் வீட்டின்பக்
குடியேற்றும் மிக்க குணநலத்தான் எம்தம்
மிடியாற் குறைந்த குடில் வேவ அருள்தீயாற்
பொடியாக்கும் மூரற் புராந்தகன் தாள் போற்றி

பொருள்:

அடியேத்தும் அன்பரை: தன் பாதங்களைப் போற்றி வழிபடும் அன்பர்களை; தன் அந்தம் இல் வீடு இன்பக் குடியேற்றும்: தனது எல்லையற்ற முக்தி இன்பமான வீட்டின் சுவர்க்கத்தில் அவர்களைக் குடியேற்றுபவரும்; மிக்க குணநலத்தான்: உயர்ந்த நற்குணங்களைக் கொண்டவருமான பெருமான்; எம்தம் மிடியால்: உடல் நான் என்னும் தேகாத்மபாவ அறியாமையால். ஆன்மீக நெறியில் "மிடி" என்பது இறைவனின் அருளைப் பெற முடியாமல், தவம், ஞானம் மற்றும் பக்தி இல்லாமல் ஆன்மீக ரீதியில் வறியவர்களாக (ஏழைகளாக) இருப்பதைக் குறிக்கும்.

குறைந்த குடில் வேவ: உடல் என்னும் இந்தச் சுருங்கிய குடில் தீப்பற்றி எரியும்போது; அருள்தீயால் பொடியாக்கும்: தன் அருளாகிய நெருப்பைக் கொண்டு சாம்பலாக்கும்; மூரற் புராந்தகன் தாள் போற்றி: மன்மதனை எரித்தவரும், திரிபுரங்களை அழித்தவருமான அந்தப் பெருமானின் திருவடிகளைப் போற்றி வணங்குகிறேன்.

விளக்கவுரை:

சிவபெருமான் தன் அடியார்கள் மீது அளவற்ற அன்பு கொண்டவன். தன்னை நம்பியவர்களைப்

பிறவிப் பிணியிலிருந்து விடுவித்து, மோட்ச வீட்டின் இன்பத்தில் கொண்டுபோய்ச் சேர்ப்பவன். அறியாமையில் எழும் அன்பர்களின் முத்தாபத் தழற்கொழுந்தைத் தன் அருள் தீயால் அணைக்கும் முப்புரம் எரித்த சிவனின் தாள்கள் போற்றி.

முழுமையுமாய் நின்றும் முனிவரனாய் எம்மை
எழுமையும் ஆட்கொண்ட இறைவன் அடி போற்றி

பதம் பிரிப்பு:

முழுமையுமாய்: எங்கும் பரிபூரணமாய், எதிலும் குறையற்ற முழுமுதற் பொருளாக; நின்றும்: நிலையாக விளங்கி; முனிவரனாய்: முனிவனாக (ஞான வடிவமான குருவாக); எம்மை: நம்மை; எழுமையும்: ஏழேழ் பிறவிகளிலும்/தொடர்ந்து வரும் அனைத்துப் பிறவிகளிலும்; ஆட்கொண்ட: தனது அடிமையாக ஏற்று அருள் புரிந்த; இறைவன்: ரமணப் பெருமானின்; அடி: திருவடிகளை; போற்றி: வணங்குகிறோம்.

விரிவான விளக்கம்:

பகவான் ரமணர் வெறும் உடல் வடிவமானவர் அல்ல; எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் பரிபூரண மெய்ப்பொருள்.

மௌனத்தினூடே ஞானத்தை வழங்கும் தட்சிணாமூர்த்தியின் வடிவமாக, ரமண மகரிஷி குருவாக எழுந்தருளி பக்தர்களுக்கு முக்தி அருள்பவர்.

காலந்தோறும் தொடரும் நம்முடைய வினைப் பயன்களையும் பிறவித் தொடர்ச்சியையும் தடுத்து, தன் அருட்பேரவையின் கீழ் கொண்டு வந்த அந்தத் திருவருள் திருத்தாள் போற்றி.

ரமணபுராண வாக்குகளை தொடர்ந்து மீண்டும்
புரிந்து கொண்ட வகையில் பகிர்கிறேன்


ஓம்
நமோ பகவதே ஸ்ரீ அருணாசலரமணாய
ஸ்ரீ முருகனார் விதேக கைவல்ய காலம்
(வெண்பா)
ஆண்டுபிர மாதீசத் தாவணியீ ராறுசெவ்வாய்
மீண்டுமமா வாசிமக விண்மீனி - லீண்டடைந்தார்
நாழிகைநான் கின்முருக னார்விதேக கைவல்ய
மாழிரம ணப்பதத்தி லாழ்ந்து
28-8-1973
SAMADHI
OF
SRI MURUGANAR
(1890 – 1973)
ABSORBED IN ARUNACHALA
28TH AUGUST, 1973




# ஸ்ரீ ரமணாச்ரம செய்திகள்

## ஸ்ரீ பகவானின் அருணை விஜய விழா

*பகவான் ஸ்ரீ ரமண மகரிஷிகள், இளம் வேங்கடராமனாக 1896ல் திருவண்ணாமலைக்கு வந்தடைந்ததன் 130 வது ஆண்டு நிறைவு விழா, ஸ்ரீ ரமணாஸ்ரமத்தில் செப்டம்பர் 1, செவ்வாய்க்கிழமை அன்று விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. ஆசிரமத்தில் பகவானின் சமாதி சன்னதியில் சிறப்பு பூஜை மற்றும் அபிஷேகத்துடன் விழா தொடங்கியது. மதுரை ரமண மந்திர பக்தர்கள் வருடாந்திர யாத்திரையாக வருகை தந்து, மாத்ருபூதேஸ்வரர், ஸ்ரீ பகவான் சன்னதிகள் மற்றும் புது மண்டபத்தில் 'அருணாசல அக்ஷரமணமாலை' பாராயணம் செய்தனர்.*

*இவ்விழாவில் 'அருணாசல அக்ஷரமணமாலை' நூலின் இந்தி மொழிபெயர்ப்பை ஆசிரமத் தலைவர் டாக்டர் வெங்கட் எஸ். ரமணன் வெளியிட, முதல் பிரதிகளை அதன் மொழிபெயர்ப்பாளர் டாக்டர் சஞ்சய் (ஆஸ்திரேலியா) மற்றும்*

*திருமதி சுசீலா ரமணன் ஆகியோர் பெற்றுக்கொண்டனர். பக்தர்களுக்கு காலை மற்றும் மதிய வேளைகளில் சிறப்புப் பிரசாதம் வழங்கப்பட்டது.*

## முதல் சம்வத்ஸர அபிஷேகம்

*2025 ஆகஸ்டில் நிகழ்ந்த ஆசிரம மஹா கும்பாபிஷேகத்தின் முதலாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு, பகவானின் ஜன்ம நட்சத்திரமான புனர்பூசத்தன்று (செப்டம்பர் 7, திங்கள்) ஸ்ரீ ரமணேஸ்வரர் மற்றும் ஸ்ரீ மாத்ருபூதேஸ்வரர் சன்னதிகளில் முதல் சம்வத்ஸர அபிஷேகம் விமரிசையாக நடைபெற்றது.*

*அதிகாலை 5:30 மணிக்கு அனுக்ஞை, விக்னேஸ்வர பூஜை, சங்கல்பம், புண்யாஹவாசனம், மஹாநியாசம் மற்றும் ஸ்ரீ ருத்ர சூக்த ஜபங்களுடன் வைபவங்கள் தொடங்கின. தொடர்ந்து கணபதி, பகவான் மூலமந்திரம், துர்காஸ்ரீ சூக்தம், நவகிரகம், ஸ்ரீ ருத்ரம் மற்றும் பரிவார ஹோமங்கள் நடைபெற்றன.*

*காலை 9:30 மணிக்கு வஸோர்தாரையும், 9:45 மணிக்கு மஹா பூர்ணாஹூதி மற்றும் தீபாராதனையும் நடந்தேறின. அதனைத் தொடர்ந்து காலை 10:00 மணிக்கு ஸ்ரீ பகவான், ஸ்ரீ மாத்ருபூதேஸ்வரர் மற்றும் பரிவார தேவதைகளுக்குச் சிறப்பு மஹாபிஷேகம் நடத்தப்பட்டு, 10:30 மணிக்கு மஹா தீபாராதனையுடன் விழா நிறைவுற்றது.*

## முருகனார் ஆராதனை

*ஸ்ரீ ரமண மகரிஷிகளின் அணுக்கத் தொண்டர்களுள் அளப்பரிய மதிப்புக்குரியவராக விளங்கியவர் முருகனார். ஒப்பற்ற தமிழ்ப் புலமை, ஆத்ம ஞானத்தின் அனுபவம், சிறந்த குரு பக்தி, தன்னடக்கம் போன்ற தெய்விகப் பண்புகள் யாவும் ஒருங்கே அமையப் பெற்ற முருகனாரின் ஆராதனை தினம், இந்த ஆண்டு 10/9/2026ஆவணி அமாவாசைத் நாளில் ஆஸ்ரமத்தில் நிகழ்ந்தது.*

*அவரது சமாதியில் சிறப்பான அபிஷேக அலங்காரங்களும், அவர் இயற்றிய பக்திப் பாடல்களின் பண்ணிசையும், அட்சரமணமாலை பாராயணமும் மனதை உருக்கும் வண்ணம் சிறப்பாக அரங்கேறின.*

## முருகனார் மந்திரம், இராமநாதபுரம்

*முருகனார் ஆராதனை, ஸ்ரீ ரமணாஸ்ரமத்திற்கு பாத்தியப்பட்ட இராமநாதபுரம் ஸ்ரீ முருகனார் மந்திரத்திலும் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. அனைத்து ஏற்பாடுகளையும் முருகனார் மந்திர காப்பாளார் திரு. சிரஞ்சீவி அவர்கள் சிறப்பாக செய்திருந்தார்.*

## தஞ்சை, பூண்டி ஸ்ரீ ரமணாலயக் கும்பாபிஷேகம்

*தஞ்சாவூர் மாவட்டம், பூண்டியில் வடவாற்றின் கரையில் அமைந்துள்ள ஸ்ரீ ரமண பகவானின் ஆலயக் கும்பாபிஷேகம், 2026 செப்டம்பர் 7 அன்று காலையில் சிறப்புற நடைபெற்றது. இந்நிகழ்வில் தஞ்சாவூர் மற்றும் சுற்றியுள்ளப் பகுதி பக்தர்கள் திரளாகக் கலந்து கொண்டனர். திருவண்ணாமலை ஸ்ரீ ரமணாஸ்ரமம் சார்பில் திரு. சந்திரமௌலி மற்றும் திரு. விஜயகுமார் தம்பதியினர் கலந்துகொண்டனர். திரு. கிருஷ்ணசாமி வாண்டையார் அவர்கள் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்தார்.*

*விழாவின் முடிவில் கலந்துகொண்ட அனைவருக்கும் அன்னதானப் பிரசாதம் வழங்கப்பட்டது. இவ்விழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் டாக்டர் திரு. பெருமாள் மற்றும் ரமணத் தொண்டர் திரு. மாரியப்பன் ஆகியோர் முன்னின்று சிறப்பாகச் செய்திருந்தனர்.*

## பகவான் ரமணரின் திருவடி நிழலில் ‘ஆசிரியர் பாலு’



*பழனி கன்னியூரில் பிறந்து (28.02.1968), பொள்ளாச்சி மலையாண்டிபட்டினத்தில் ஆசிரியராகப் பணியாற்றியவர் திரு. பாலசுப்பிரமணியன். அன்பர்களால் ‘ஆசிரியர் பாலு’ என அழைக்கப்பட்ட இவர், ‘ஸ்ரீ அருணாசல அக்ஷரமணமாலை சேவை மையத்தின்’ நிறுவனராவார். சிறுவயதில் காஞ்சி மகா சுவாமியின் தரிசனம் பெற்ற இவர், பின்னர் இசைஞானி இளையராஜாவின் “ரமண அனுபவம்” நூலைப் படித்துப் பகவானின் தீவிர பக்தரானார்.*

*2004ல் நடைபெற்ற ரமண ரத யாத்திரையின் மூலம் அன்பர்களோடு தொடர்பு கொண்ட இவர், சத்சங்க பாராயணத்தின்போது பகவானை ஜோதி வடிவில் தரிசித்த மெய்யனுபவத்திற்குப் பின், தம் வாழ்வையே அக்ஷரமணமாலைத் தொண்டிற்கு அர்ப்பணித்தார். மாணவர்களுக்கு ஆன்மிக முகாம்கள் நடத்தியதுடன், 2014 நூற்றாண்டு விழாவிலிருந்து ஸ்ரீ ரமணாஸ்ரமத்துடன் இணைந்து ஆண்டுதோறும் சுமார் 40,000 அக்ஷரமணமாலை நூல்களையும், வாரந்தோறும் 70 நூல்களை அஞ்சல் வழியிலும் இலவசமாக வழங்கினார். திருத்தலங்கள் தோறும் தேவாரம், திருவாசகம், பெரியபுராண நூல்களை வழங்கியதோடு, பொள்ளாச்சி சிவனடியார் திருக்கூட்டத்துடன் இணைந்து சிவாலயங்களில் திருவாசக முற்றோதல்களையும் முன்னின்று நடத்தினார்.*

*58 வயதான இந்நல்லாசிரியர், கடந்த 14.09.2026 விநாயகர் சதுர்த்தியன்று திருக்கோயில் தினசரி வழிபாட்டின் போது ஏற்பட்ட திடீர் உடல்நலக் குறைவால், சிகிச்சைக்குச் செல்லும் வழியிலேயே பகவான் திருவடி நிழலில் கலந்தார். அன்னாரைப் பிரிந்து வாடும் குடும்பத்தினருக்கு (மனைவி தாமரை, மகள் கீர்த்தனா, மகன் விஷ்வா) பகவான் மனவலிமையை அருளட்டும். அவரது அக்ஷரமணமாலைத் தொண்டு தொடர்ந்து தழைத்தோங்கப் பிரார்த்திப்போம்.*

---

Ramanodhayam - Tamil Quarterly, Registered with the Registrar of Newspaper for India. RNI NO.: TNTAM/2001/5542

*Printed and Published by:* A. Kumar Raja,
20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004 on behalf of Ramana Kendra Trust, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004

Editor: Dr. S. Ram Mohan

*Printed at:* **Multi Craft,**
9, Appavu Gramani 2nd St.,
Robertsonpet, Mandaveli, Chennai 600 028.



முதல் சம்வத்ஸர அபிஷேகம், ஸ்ரீ ரமணாஸ்ரமம்

தஞ்சை, பூண்டி - ஸ்ரீ ரமணாலயக் கும்பாபிஷேகம்





Registered with the Registrar of Newspaper for India RNI No.:TNTAM/2001/5542

